Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 15 (10.11.2003) திங்கட்கிழமை இதழ் : 41

## திருகோணமலை - குரங்குபாஞ்சான் புலிகளின் முகாமை அகற்ற வேண்டாம்!

### ஜனாதிபதி உத்தரவு என்கிறார் பாதுகாப்புத்துறை அதிகாரி

திருகோணமலை - குரங்குபாஞ்சானில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டாம் என, ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார் என பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர், கடந்த வியாழன்று தேசிய பாதுகாப்புச் சபையை ஜனாதிபதி கூட்டியிருந்தார். அங்கு புலிகளின் குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக அவரால் எதுவும் தெரிவிக்கப்படவில்லையெனவும், அந்த அதிகாரி தெரிவித்தார்.

பிரதமர் ரணில் தலைமையிலான அரசு புலிகளுடன் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையில் பல குறைபாடுகள் காணப்படுவதாக அவர் தெரிவித்தபோதிலும் அதனை திருத்த ஜனாதிபதி முற்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் இந்த முடிவு தொடர்பாக கருத்துத் தெரிவித்த சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்ண, புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவதாக முன்னர் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். ஆனால், பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றபின் அவரும் இந்த விடயத்தில் பின்வாங்கியிருக்கிறார் போலுள்ளது எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதியிடமிருந்து குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவது தொடர்பான எந்தவொரு அறிவித்தலையும் தாம் பெற்றுக்கொள்ளவில்லையென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மிதிவெடியகற்ற சென்றோரை திருப்பி அனுப்பிய படையினர்!

### பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் சம்பவம்

கடந்த சனிக்கிழமை வடமராட்சி கற்கோவளம் பகுதியில், மிதிவெடி அகற்றச் சென்ற குழுவினரைப் படையினர் திருப்பி அனுப்பியதால் ஆத்திரம் அடைந்த மக்கள் படையினரின் நடவடிக்கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது- டென்மார்க் நாட்டின் தலைமையின் கீழ் இயங்கும் மிதிவெடி அகற்றும் பிரிவினராகிய 'டெனீஸ் டீ மைனிங் குறூப்' அமைப்பினரால் மிதிவெடி அகற்றவென வடமராட்சி கற்கோவளம் பகுதியில் கடந்த மாதம் முதல் மிதிவெடிகள் உள்ள இடமென இனங்காணப்பட்ட சில இடங்களில் அடையாளப் பலகைகள் நாட்டப்பட்டிருந்தன.

எனினும், கடந்த சனிக்கிழமை காலை அங்கு வந்த படையினர் எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் மிதி வெடி அகற்றவென குறிப்பிடப்பட்டிருந்த அடையாளப் பலகைகள் என்பவற்றைப் பிடுங்கி எரித்துவிட்டுச் சென்றனர்.

(09,202)

# பாதுகாப்பு, ஊடகத்துறை தம்வசம் இல்லாததால் விடுதலைப் புலிகளுடனான சமாதான முன்னெடுப்பை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு அரசாங்கம் முடிவு!

## வெளிநாட்டுத் தூதுவர்களிடம் ரணில் தெரிவிப்பு



**(கொழும்பு)**

**"இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் போதிய அதிகாரங்கள் தற்போது இல்லாமையால், அதிலிருந்து நான் விலகிக் கொண்டு அந்தப் பொறுப்பினை ஜனாதிபதியிடம் கையளிக்கத் தயாராக உள்ளேன்." இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளித்துவரும் நோர்வே, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் தூதுவர்களை நேற்று

சியல் விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஜீ.எல்.பீரிஸ் நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## புலிகளின் ஆயுதக் கப்பல் தொடர்பான ஜனாதிபதியின் குற்றச்சாட்டை மறுக்கின்றார் திலக் மாரப்பன!

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிவந்த கப்பலுக்கு அனுமதி வழங்கியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்த குற்றச்சாட்டை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மறுத்துள்ளார்.

ஜனாதிபதி கடந்த மாதம் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிவந்த மூன்று கப்பல்களுக்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அனுமதி வழங்கியுள்ளார் என குற்றம் சாட்டியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சர், சந்தேகத்திற்கிடமான

(10 [illegible] பக்கம் பார்க்க)



சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளித்துவரும் நோர்வே, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் தூதுவர்களை நேற்று கொழும்பில் பிரதமர் சந்தித்தார்.

இதன்போதே பிரதமர் அவர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்ததாக அரசியல் விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஜீ.எல்.பீரிஸ் நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த 4 ஆம் திகதி ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மறுத்துள்ளார்.

ஜனாதிபதி கடந்த மாதம் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் விடுதலைப்புலிக

ஜனாதிபதியின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சர், சந்தேகத்திற்கிடமான

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் யுத்தநிறுத்தத்தைத் தொடருவர்; பிரதமர் சமாதானப் பேச்சைத் தொடரலாம்!

## வெளிநாட்டு செய்தி நிறுவனத்திற்கு ஜனாதிபதி பேட்டி

(கொழும்பு)

படையினர் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பர். எனவே, பிரதமர் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களைத் தொடர்ந்தும் நடத்தலாம் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

நேற்று வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த செவ்வியிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் மேலும் அவர் தெரிவித்ததாவது - தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் முகமாக நான் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளேன். சகல கட்சிகளும் இணைந்து, தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான எனது அந்த யோசனையை தகுந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

இதுபற்றி தீர்மானித்துக் கொள்வது, தற்பொழுது பிரதம மந்திரியையே சார்ந்ததாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்பிய பின்னர் நான் இன்னமும் அவருடன் உரையாடவில்லை. விரைவில் பிரதம மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவருக்கு அழைப்பு விடுக்கவுள்ளேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.(01)



# புலிகளின் திட்டவரைபு குறித்து பௌத்த பீடங்களின் கருத்தறிய மகாசங்கத்தினர் பகீரத முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டவரைபு தொடர்பாக, பௌத்த பீடங்களின் ஒருமித்த கருத்தை அறியும் முயற்சியில் பௌத்த மகா சங்கத்தினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகா சங்கத்தின் தேசிய சம்மேளனத் தலைவரான எல்லாவெல மேதா னந்த தேரர், எதிர்வரும் 12 ஆம் திகதி இது தொடர்பாக அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் தலைவர்களைச் சந்தித்து ஆராயவென கண்டிக்குச் செல்லவுள்ளார்.

இவர் தலைமையிலான குழுவொன்று அண்மையில் இடம பெற்ற நாட்டின் மாற்றங்கள் மற்றும் கட்சிகளுக்கிடையேயான முரண்பாடுகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளது.

விடுதலைப் புலிகளின் தீர்மானம் தமக்குப் பாதகமாக அமையுமெனக் கண்டால், அதற்கெதிராக பல எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும், எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அம்மான்ர நடவடிக்கையெல்லாம் அவாவுக்கு திருப்பி அடிக்கிது...!

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# யாழ்ப்பாணத்தின் அசாதாரண சூழ்நிலையிலும் கல்விப் பணியை முன்னெடுத்தவர் துரைராசா

**அமரர் பேராசிரியர் அ.துரைராசாவின் 68 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**



இன்று அமரர் துரைராசா என்ற உச்சரிப்பு, யாழ்ப்பாண பல்கலைக் கழகம் என்ற உயர் கல்வி நிறுவனத்துடன் சேர்ந்த ஒரு பெயராக மாறி விட்டது. இந்தப் பல்கலைக்கழகம் தோன்றி வளர்ந்த வரலாறு மிகக் குறுகியதுதான். ஆனால், இந்தக் குறுகியகால எல்லைக்குள் அமரர் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் ஆறு ஆண்டு காலத்திற்குள் ஆற்றிய அளப்பரிய பணிகள் பல்கலைக் கழக வளர்ச்சிக்கு நீண்டகால வரலாற்றுப் பெருமையையும், புகழையும் தேடிக்கொடுத்தது என்பதில் ஐயமில்லை. அவை அவர் பதவிவகித்த காலத்தின் பின்னணியில் வைத்து விரிவாக மதிப்பிடவேண்டியவை.

1987 களின் பின்னர் யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்திற்கு துணை வேந்தராகத் துணிவோடு பதவிப்பொறுப்பை ஏற்பது என்பது ஒருவரின் ஆழுமையையும், அச்ச உணர்வையும் பரிசோதித்துப் பார்க்கும் ஆபத்தான காரியம் என்பதைப் பல்கலைக்கழக நடைமுறைகளைத் தெரிந்துகொண்ட அனைவரும் நன்கு அறிவார்கள். அன்றைய அசாதாரண சூழ்நிலையைக் காரணம் காட்டி யாழ்ப்பாணத்துக் கல்விப் புலமையாளர் பலர் அகதி என்ற பெயரில் அன்னிய நாட்டின் அடிமை வாழ்வை நேசித்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தபோது, இதற்குப் புறநடையாக அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் தன் கல்விப் புலமையைத் தன் சொந்த மண்ணிற்கே பயன்படுத்தத் தன் குடும்பத்தோடு சொந்தக் கிராமத்தில் வந்து குடியேறியமை அவரிடம் குடிகொண்டிருந்த இனப்பற்றையும் நாட்டுப்பற்றையும் எடுத்துக்காட்டும் நல்லதொரு உதாரணமாகும்.

அமரர் துரைராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியால் தனக்கு ஏற்படப்போகும் துன்ப துயரங்களையும் கிடைக்கப் போகும் சலுகைகளையும் யாழ்ப்பாணச் சமூகம் கல்வியாளனுக்கு கொடுக்கும் மதிப்பையும் முன்கூட்டியே நன்கு அறிந்திருந்தார். அவர் துணைவேந்தருக்குரிய எந்தச் சலுகையையும் எதிர்பார்த்து வரவில்லை. அதை அனுபவிக்க அவருக்கு வாய்ப்பும் இருக்கவில்லை. பல்கலைக்கழகத்தின் சாதாரண தொழிலாளிக்குரிய நிலையில் நின்றே தன் கடமையை ஆற்ற நினைத்தார். அவர் பல்கலைக்கழக கடமையின் நிமிர்த்தம் மழையிலும், குளிரிலும் - கடலாலும், தரையாலும் பல நாட்கள் கொழும்பு சென்று வந்ததையோ, மக்களோடு மக்களாய் தாண்டிக்குள மர நிழலின் கீழ் உணவுக்காகக் காத்து நின்றதையோ, தனக்கு கிடைத்த அசௌகரியமாகப் பார்த்ததில்லை. அவற்றையெல்லாம் தனக்குக் கிடைத்த புதிய அனுபவமாகப் பார்த்தார்.

சமகாலத்துத் துணைவேந்தர்கள் தென்னிலங்கையில் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, இவர் மட்டும் சாதாரண குடிமகனாக வடமராட்சியில் இருந்து 44 கிலோமீற்றர் தூரத்தை துவிச்சக்கரவண்டிமூலம் கடந்துவந்து கடமையாற்ற வேண்டிய நிர்ப்பந்தம். அதற்காக அவர் என்றுமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக, தனக்குரிய கடமையாகப் பார்த்தார். இதற்கொரு உதாரணத்தை இங்கு குறிப்பிடலாம்.

1992 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 6 ஆம் திகதி என நினைக்கிறேன். அன்று தான் யாழ்.மகளிர் கல்லூரியில் ஒன்பதாம் ஆண்டு மாணவர்களுக்கான வரலாற்று பாடநூல் துணைவேந்தரால் அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி அன்று அதிகாலை 5.30 மணியளவில் கொட்டும் மழையில் மழைக்கவசம் அணிந்த ஒரு உருவம் அச்சுவேலியில் உள்ள எனது வளவின் வாசல் கேற்றைத் திறந்துகொண்டு வீட்டு வாசலை நோக்கி மழைவெள்ளத்தில் நடந்து வரும் சத்தம் கேட்கின்றது. அசாதாரண சூழ்நிலை பக்கத்தில் ஏதும் அசம்பாவிதம் நடந்துவிட்டதோ என்ற அச்சத்தில் ஜன்னலூடாகப் பார்த்த போது, வந்தஉருவம் மீண்டும் வீதியைநோக்கி நடக்கிறது. ஆனால், அந்த நிலவில் உருவத்தின் கம்பீரமான நடை எமது துணைவேந்தர் என்பதை உறுதிப்படுத்தியது. கதவைத் திறந்து துணைவேந்தரை வீட்டுக்கு அழைததபோது, வழமையான புன்சிரிப்போடு ஆறுமணிக்கு முன் பல்கலைக்கழகம் போகவேண்டும் என்று அவசரமாக வந்தேன். கெட்ட காலம்- வல்லையில் சைக்கிள் காற்றுப்போய்விட்டது என்று சிரித்துக் கொண்டே கூறினார். அப்போது நாம் அவரிடம் கேட்ட கேள்விக்கு அவர் கூறிய பதில் - அதிகாலை மூன்று மணிக்கே வீட்டில் இருந்து புறப்பட்டு விட்டேன் என்பது தான். இதை இன்னும் 20 ஆண்டுகள் கழித்து, இப்படியான துணைவேந்தர் ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றினார் எனக் கூறினால எத்தனை பேர் நம்புவார்களோ தெரியாது.

அமரர் பல வசதியீனங்களுக்கு மத்தியில் துணைவேந்தராகக் கடமையாற்றியபோதும், அவரிடம் நாம் காணக் கூடியதாக இருந்த இன்னொரு நல்ல பண்பு அவர் தனது அதிகாரங்களை தவறான வழியில் என்றுமே பயன்படுத்தியதில்லை. அதைத்தவறுதலாக- அநியாயங்கள் செய்ய வழங்கப்பட்ட சலுகையாகக் கருதியதும் இல்லை. மாறாக முடிந்தளவிற்கு அதைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்காகவே பயன்படுத்திக் கொண்டார். அவர் பொறியியல் பட்டம் பெற்ற சர்வதேச புலமையாளர்களில் ஒருவர் மண்ணியலில் அவரது புதிய கண்டுபிடிப்பு அவர் பெயரில் புதிய கருதுகோளாக கற்பிக்கப்பட காரணமாகியது. பொறியியல் துறையில் அவருக்கிருந்த ஆற்றலும் ஆய்வுப்புலமையும் அவர் நிலைக்கு வந்த ஒருவரால் தான் மதிப்பிட முடியும். தமிழ் மாணவர்களுக்கு மிக அவசியமான பொறியியல்பீடம், விவசாய பீடம் ஆகியவற்றை அமைப்பதற்குரிய முன்னேற்பாடுகள் அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் காலத்தில் தொடக்கப்பட்டாலும், விவசாயபீடத்தை கிளிநொச்சியில் தொடக்கிவைத்த பெருமை அமரர் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கே உரியது. அதேபோல் பொறியியல் பீடத்தை அக்கராயனில் தொடக்குவதற்குரிய தொடக்கக் கட்டுமானப் பணிகளும் இவர் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இப்பல்கலைக்கழ்கத்தில் அமரர் ஆற்றிய பெருமைக்குரிய இன்னொரு நல்ல பணி, தன் தனிப்பட்ட முயற்சியில் ஆராய்ச்சி நூல்களை வெளியிட நிரந்தர நிதியம் ஒன்றை ஏற்படுத்தியதாகும். ஒரு பல்கலைக் கழகத்தில் இருந்து சமூகம் எதிர்பார்ப்பதில் அப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் படைப்புகளும் ஒன்றாகும். பல பல்கலைக்கழக வாசல் பகுதியை அப்பல்கலைக்கழகப் படைப்புகள் அலங்கரிப்பதைப் பார்த்திருக்கிறோம். இதை உணர்ந்து செயற்பட்டவர் அமரர் துரைராசா அவர்கள். இவரின் தனிப்பட்ட முயற்சியால் 1992 இல் யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூல் பல்கலைக் கழக வெளீயிடாக வந்தது. அப்போது அந்நூலின் பதிப்பாசிரியராக இருந்த போராசிரியர் சி.க.சிற்றம்பலம் அமரர் பற்றிக் கூறிய கருத்தை இவ்விடத்தில் நினைவுபடுத்தவது பொருத்தமாகும். "துணை வேந்தராக போராரியர் அ.துரைராசா பொறுப்பேற்றமை இப்பல்கலைக் கழத்தின் ஆய்வுத்துறை வரலாற்றில் ஒரு மைல்கல் என்றால் மிகை யாகாது. அவருக்குரிய ஆராய்சிச்சிப் புலமை, ஆளுமை, சர்வதேசத் தொடர்பு என்பனவே.

இப்பல்கலைக்கழக வரலாற்றிலே முதன் முதலாக ஆராய்ச்சி நிதியம் ஒன்றை ஏற்படுத்த வழியமைத்தது. இந்நிதியத்தின் மூலம் ஆய்வாளர்கள் எதுவித நிதிக் கஷ்டமும் இன்றி ஆய்வை மேற்கொள்ளவும், தமது ஆய்வுப் பெறுபேறுகளை நூல்வடிவ மாக்கவும் வாய்ப்பளிக்கப் படடது. இச்சந்தர்ப்பத்தில் தான் நாம் மறந்திருந்த யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய ஆய்வும் புனர்ஜென்மம் எடுத்தது. இதற்கு காரணகர்த்தா நமது பெருமதிப்புக்குரிய துணைவேந்தர் துரைராசா ஆவார். பல்கலைக்கழ வெளியீடுகள் என்பது தனிப்பட்டவர்களின் ஆளுமையின் வெளிப்பாடு மடடுமல்ல ஒட்டுமொத்த பல்கலைக் கழக சமூகமும் ஆராய்சி சித்துறையில் கொண்டிருந்த ஈடுபாட்டின் அடையாளச் சின்னமும் கூட, இன்று அது மறக்கப்பட்ட நிலையில் இருந்தாலும் அமரரின் காலத்தில் வெளிவந்த நூல்கள் அவரை என்றும் நினைவு கூரும்.

இன்று அமரரின் 68 வது பிறந்த தினம். அவர் மறைந்து ஏழு ஆண்டுகள் கடந்து செல்கின்றன. வாழும் போது பலராலும் விமர்சிக்கப்படும் ஒருவர் மரணத்தின் போது போற்றப் படுவார். இது மரணத்தால் ஏற்படும் ஓரு நன்மை. ஆனால், அமரர் என்றுமே எல்லோராலும் போற்றப்பட்ட ஒப்பற்ற நல்ல மனிதர், அவருக்கே இயல்பான அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், நேர்மை, கடமை, மனிதநேயம் அவரை உயர்ந்த நிலையில் வைத்து எல்லோராலும் மதிக்கச் செய்தன. ஆரவாரமின்றி இன, மத, வேறுபாடுகளைக் கடந்து விசுவாசம் மிக்க நிலையான மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு. தன் பதவியை தன் சுய விளம்பரத்திற்காகப் பயன்படுத்தியது கிடையாது. அதேவேளை மக்களுக்கு பயனுள்ள சமூக நிகழ்வுகளிலிருந்து அவர் விலகியதும் கிடையாது. பல்கலைக்கழகத்தில் மூப்பு, இளமை பாராது - தொழில் வேறுபாடு காணாது, எல்லோரையும் இன்சொல்லால் வழிநடத்திய பெருமை அவருக்கே உள்ள இயல்பு. தன் மரணத்தின் நாட்களைத் தானே எண்ணிக்கொண்டு புன்சிரிப்போடு துணைவேந்தர் பதவிக்கு பெருமை தேடிக் கொடுத்தவர் அமரர் துரைராசா அவர்கள். தந்தை செல்வாவின் மரணத்துக்குப் பின்னர் தமிழ்ச் சமூகமும் அதுவும் ஒரு கல்வியாளனுக்காக கண்ணீர் வடித்ததென்றால் அமரர் துரைராசாவின் மரணத்தில் என்றே கூறலாம். அவர் நினைவு என்றும் நிலைக்கட்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தடம்புரளாதிருக்க.

**கலாநிதி ப.புஷ்பரட்ணம்**


## UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

**The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from suitable contractors for 'Fabrication/Installation/Commissioning of a carburettor' for gas plant at Dept.of Chemistry, Faculty of Science, University of Jaffna.**

**Tenders forms may be obtained from the Works Engineer (Civil) University of Jaffna until 19.11.2003 on producing receipt for the cash payment for the following tender fees at the shroff's counter of University of Jaffna.**

1. Refundable deposit - Rs. 500/-
2. Non-refundable deposit - Rs. 5000/-

**Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 03.12.2002 at 10.00 a.m**

**Tender forms may be inspected by the tenderers free of charge at planning Branch of this University during office hours if necessary.**

**Registrar,** **P.O.Box 57,**
**University of Jaffna.** (சி-1788) **Thirunelvely, Jaffna.**



நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
சரத்குமார், தேவயானி நடித்த
ஒருவன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
AMERICAN BEAUTY
(சி-1752)



ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)



## 'கடல்வாழ் ஆரோக்கிய உணவும் போஷாக்கும்' தொடர்பான கருத்தரங்கு

இடம்: யா/நாவலர் மண்டபம்
காலம்: 12.11.2003 (புதன்கிழமை)
நேரம்: மாலை 2.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை
கருத்தரங்கை நடத்துபவர்: செல்வி சி.வேல்விழி Msc.M Phil
'M.S.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை'
விடயம்: 'கடல்வாழ் ஆரோக்கிய உணவும் போஷாக்கும்'
கடல்வாளம் தொடர்பான அறிவினைப் பெற்று பயன்பெற ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்,
மூளாய், சுழிபுரம். (525)



## யாழ்.குடாநாட்டு வியாபாரிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அன்பான அறிவித்தல்

ஜோ.எகட்டனின் செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டமஸ், ஸ்தாபனத்தார்.

இலங்கையின் முன்னணி நிறுவனமான மகாராஜாவின்

1. M.B.C NET Work (private LTD)
2. M.T.V CHANNEL (P.V.T. LTD)

விளம்பர ஸ்தாபனத்தாருடன், யாழ் மாவட்ட பிரதம முகவராக 5-11-03 முதல் இணைகின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.
சக்தி F.M சக்தி T.V YES F.M
M.T.V CLASSIC F.M. சிரச T.V எவற்றிலும்
உங்கள் விளம்பரங்களை இணைத்துக்கொள்ளலாம். உங்கள் விளம்பரத் தேவைகள் எதுவானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். யாழ் வியாபாரிகளுக்கு மட்டும் செனித் வழங்கும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை சக்தி F.M இல் விளம்பரம் செய்பவர்களுக்கு 20 வீத அதிரடிக் கழிவு இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்மேலதிக விபரங்களுக்கு :-

ஜோ.எகட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டமஸ்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

அதிரடித் தொலைபேசி - 077-7032188,
உள்ளகத் தொடர்புகளுக்கு - 222-7227, 0712-399166
(சி-1784)

# தேசிய அரசு அமைக்க வருமாறு விடுத்த வேண்டுகோளை

# ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நிராகரித்தது?

தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்க முன்வருமாறு சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா விடுத்த வேண்டுகோளை, ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொறுப்பெடுத்த மூன்று அமைச்சரவைப் பொறுப்புக்களையும் மீண்டும் உரிய அமைச்சர்களிடம் ஒப்படைக்கும்வரையில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் எவ்வித உடன்பாட்டுக்கும் வருவதில்லை என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் எம்.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

வெள்ளியன்று இரவு அரச தொலைக்காட்சியூடாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வருமாறு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்புக்கள் தொடர்ந்தும் தன்வசமே இருக்கும் என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளை முன்னெடுக்கலாம் என்றும் தெரிவித்து, நோர்வேத் தரப்பு தமக்குரிய வரையறைகளுடன் செயற்படவேண்டும் என்றும் உரையாற்றியிருந்த ஜனாதிபதி சந்திரிகா, தனது உரையின் இறுதியில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வருமாறு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருந்தார்.

அவரது இந்த வேண்டுகோள் தொடர்பாகக் கேட்டபோதே, நாடாளுமன்ற விவகார அமைச்சர் அதைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற தமது கட்சி நிலைப்பாட்டை இவ்வாறு தெரிவித்திருந்தார்.

## கொழும்பில், வட-தெற்கு பத்திரிகையாளர்களுக்கான கலந்துரையாடல்

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில், வடக்கு - தெற்கு பத்திரிகையாளர்கள் கலந்துகொண்ட நிகழ்வொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பத்திரிகையாளர்களால் சமாதான முன்னெடுப்புக்கு வழங்கப்படுகின்ற காத்திரமான பங்கு பற்றியும், வட இலங்கையைச் சேர்ந்த பத்திரிகையாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தமிழ், சிங்களப் பத்திரிகையாளர்களினது தலைவர்கள், செயலாளர்கள் உட்பட, அனைத்து விடயங்களிலும் சமமான முறையில் ஒவ்வொருவர் நியமிக்கப் பட்டதாவும் தெரிவிக்கப்படுகிறது.(111)

## நியாப் திட்டத்தின் கீழ்

# வறிய குடும்பங்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு தொடர்பாக, 3 ஆண்டுத் திட்டமொன்று, நியாப் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், மன்னாரில் யுத்த அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள வறிய குடும்பங்களைத் தெரிவுசெய்து, முதல் 40 குடும்பங்களினதும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புக்கு உதவிபுரிய முன்வந்துள்ளது. இந்தக் குடும்பங்களுக்கு என 15 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக - குளங்கள், வாய்க்கால்களைப் புனரமைப்பதோடு, பல நோக்கங்களை மையமாகக் கொண்டு, 32 இற்கு மேற்பட்ட பொது மண்டபங்கள், புதிய குடிநீர்க்கிணறுகள் மற்றும் புதிய விவசாய வீதிகள் என்பவற்றைப் புனரமைக்கவிருக்கின்றது.

வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஒவவொருவருக்கும், 20 ஆயிரம் ரூபா வீதம் சுழற்சி முறையில் கடன் உதவிகளையும் வழங்கி வருகின்றது (201)

# வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்காவிழன்

# ரோக்கியோ நிதி உதவிகள் கிடைக்காது!

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



வரவு - செலவுத் திட்டத்தினை உடனடியாக சமர்ப்பிக்கமுடியாது விட்டால், ரோக்கியோ மாநாட்டில் உறுதி வழங்கப்பட்ட நிதியுதவிகள் அற்றுப்போகும் வாய்ப்புக்கள் இருப்பதாக, தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளதால், குறித்த காலப்பகுதிக்குள், வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாது போகுமென நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று அதிகாரிகள் கூட்டத்தில் இலங்கை அறிக்கை ஒன்றினையும் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டிய அவர், அந்தக் கூட்டத்தில் அரசாங்கம் அளித்த வாக்குறுதிக்கமைய வரவு - செலவுத் திட்ட யோசனையை சமர்ப்பித்துள்ளோம் என, அங்கு தெரிவிக்கவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ம் திகதிக்கு முன்னர் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காதுபோனால் ரோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதியுதவிகள் கிடைக்காது சென்றுவிடுமென அவர் கூறினார்.

## சட்டவிரோதமாக வெளிநாடுசெல்ல முயன்று கைதான

# 51 பாகிஸ்தானியர்கள் நாடு கடத்தப்பட்டனர்!

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரேதமானமுறையில் தங்கியிருந்த, 59 பாகிஸ்தானியர்கள், கடந்த சனிக்கிழமையன்று கராச்சிக்குத் திருப்பியனுப்பப் பட்டுள்ளனர்.

இவர்கள் 3 மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோதமானமுறையில், கடல் வழியாக கிறிஸ் நாட்டுக்குச் செல்ல முயன்றபோது, கப்பலில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற விசாரணைகளின் பின்னர், இவர்கள் நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கராச்சிக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களுள் பெரும்பாலானோர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகிறது.

பாகிஸ்தான் அதிகாரிகள் - இவர்களை விசாரணை செய்து வருகின்றனர். சட்டவிரோதமாக இவர்கள் வெளிநாடு செல்வதற்கு உதவிய முகவர்கள் குறித்து, பாகிஸ்தான் பொலிஸார் விசாரணைசெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தொலைபேசி சேவையினை வழங்கும் தனியார் நிறுவனம் ஒன்று, புதிதாக தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றினைத் திருநெல்வேலி பகுதியில் அமைத்துவருகிறது.

குடாநாட்டில் தொலைபேசி சேவையினை விஸ்தரிக்கும் நோக்குடன், இந்தத் தொலைதொடர்பு கோபுரம் அமைக்கப்படுகிறது.

இதன்மூலம் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் தொலைபேசி சேவையினை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (205)

## பயிற்சி வழங்கிய அமெரிக்க இராணுவ அதிகாரிகள் அரசியல் சூழ்நிலையால் வெளியேற மாட்டார்கள்!

## இராணுவத் தலைமையகம் தெரிவிப்பு

இலங்கை இராணுவத்துக்கு பயிற்சியளித்துக்கொண்டிருக்கும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள், தற்போதைய அரசியல் சூழ்நிலையால் இங்கிருந்து வெளியேற மாட்டார்களென, இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்ற பின்னரும், சுமார் 100 அமெரிக்க அதிகாரிகள் பல்வேறு பயிற்சிகளை படையினருக்கு வழங்கிவருவதாகத் தெரிவித்த மூத்த இராணுவ அதிகாரியொருவர் - கடற்படை மற்றும் விமானப்படையினருக்கு பயிற்சியளித்து வருவதாவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் - அமெரிக்காவின் 13 ஆவது விமானப்படைப் பிரிவும், கடற்படையின் 613 ஆவது பிரிவும் பயிற்சியை வழங்கிக் கொண்டிருப்தாகவும் தெரிவித்தார். இப்பயிற்சியில் இருதரப்பும் அனுபவங்களைப் பரிமாற்றம் செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி திட்டத்தில் 613 ஆவது படைப்பிரிவு - தகவல் பரிமாற்றம், தந்திரோபாய பரிமாற்றம் மற்றும் உபகரண உதவிகளையும் வழங்கிவருகிறது.

தற்போதைய சூழ்நிலை குறித்து இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் -பாதுகாப்பு ஆலோசகர்கள், அரசியல் விவகார அதிகாரிகள் என 12 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டுள்ளனர். இதில் அமெரிக்கா, பிரிட்டன், சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளனர். இந்தக் கூட்டத்தில், அமெரிக்க இராணுவ நிபுணர்களின் பாதுகாப்பை பொறுப்பேற்க முடியுமென இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத் திட்டத்தின்படி, பயிற்சிகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான முயற்சிகள் தொடரும் என்ற சந்திரிகாவின் முடிவினை எதிர்ப்போம்!

## திலக் கருணாரட்ண தெரிவிப்பு



நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுக்கள் தொடரும் என்றும், விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் எனவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளதற்கு, சிஹல உறுமயவின் தலைவர் திலக கருணாரட்ண கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா - நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரை குறித்து கருத்து வெளியிடும்போது, திலக் கருணாரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது -

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் மூன்றாவது தரப்பு என்ற பெயரில், வெளிநாடு ஒன்று தலையிடுவது கடும் கண்டனத்திற்குரியது. நாம் தொடர்ந்தும் அவர்களை வெளியிலேயே வைத்திருக்க வேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் - வெளிநாட்டவர்கள் தலையிடுவதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கக்கூடாது.

போர்நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என ஜனாதிபதி அறிவித்திருப்பது குறித்துக் கருத்து வெளியிட்ட திலக் கருணாரட்ண -

ஜனாதிபதி செல்லும் பாதை- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் வேறுபாடு எதையும் காணமுடியவில்லை

போர்நிறுத்த உடன்பாடு காலாவதியாகிவிட்டதொன்று. இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா போர்நிறுத்தம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று அறிவித்திருப்பதால், நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம், இந்த விவகாரத்தை சிஹல உறுமய அணுகவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி தனது உரையில் - தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளமை வரவேற்கத்தகக ஒரு முடிவாகும். அனைதது முன்னணி அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து, தேசிய அரசாங்கத்தை அமைக்க முன்வருவதன் மூலம், சிறுபான்மைக் கட்சிகளின் பேரம் பேசும் பலத்தை வீழ்த்தமுடியும்.

தற்போது சிறுபான்மையினரே நாட்டில் எல்லா விடயங்களையும் தீர்மானிப்பவர்களாக இருக்கிறார்கள். தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கு, நாம் அனைவரும் ஒன்றிணையாவிட்டால், நாட்டைப் புலிகளின் கையில் கொடுக்கவேண்டியநிலை உருவாகும். இது மிகவும் ஆபத்தான ஒன்று எனத் திலக் கருணாரட்ண மேலும் தெரிவித்தார்.

## தவறவிடப்பட்ட பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும்

இந்த ஆண்டு நல்லூர் உற்சவ காலத்தின்போது, தவறவிடப்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு, பாதுகாப்பு செயல்ணி ஊடாக அரசியற்துறை யாழ்.நல்லூர் கோட்டப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகளூடாகக் கொடுக்கப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைவாக, இப்பொருட்கள் சிலவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்த போதும், மேலும் பல பொருட்கள் பெறப்படாமல் உள்ளன.

எனவே, உரியவர்கள் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை, காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை, யாழ்நல்லூர் கோட்ட அரசியல் துறையினருடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.(205)

# ஐ.நா.அமைதிப்படையில் பணியாற்ற இலங்கைப் படையினர் அனுப்பப்படுவர்

## இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு

ஐ.நா. சபையினர் ஏற்கனவே கேட்டுக்கொண்டதற்கிணங்க, இலங்கை இராணுவத்தினர் ஐ.நா.சபையின் அமைதிகாக்கும் படைப்பிரிவில் இணைய அனுப்பிவைக்கப்படுவர் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மோதல்கள் அற்ற நாடுகளுக்கே இலங்கைப் படையினர் அனுப்பி வைக்கப்படுவர். அந்த நாடுகளில் அமைதிப் பணியில் இவர்கள் ஈடுபடுவர் எனவும், தெரிவித்த இராணுவத் தளபதி, ஏற்கனவே ஒரு தொகுதி படையினர் இந்த சமாதானப் படையில் இணைந்து செயற்பட அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

தற்போது இலங்கை இராணுவத்தில் உள்ள உயர்தர அதிகாரிகளே இவ்வாறான சமாதான நடவடிக்கைகளுக்கு அனுப்பப்படவுள்ளனர் எனவும், ஏனைய தரத்தில் உள்ளவர்கள் அனுப்பப்படமாட்டார்கள் எனவும் தெரிவித்த அவர், இவ்வாறு செல்லும் இராணுவ அதிகாரிகள் பயிற்சி பெறுவதுடன், அது நல்ல அனுபவமாக அவர்களுக்கு அமைவதுடன், வெளிநாட்டு அலுவலர்களுடன் இதுபோன்ற பழக்கங்களை ஏற்படுத்துவதன் மூலம் இங்குள்ள படைச் சிப்பாய்களுக்கு அதுபற்றி விளக்கமளிக்க முடியும் எனவும் தெரவித்தார்.

இவ்வாறு செல்லும் இராணுவ அதிகாரிகள் குழுவினருக்கு உள நிலை மாற்றம் ஏற்படுவதுடன், பொருளாதார லாபமும் உள்ளதெனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு

# அதிகளவிலான மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்!

## புவியியல்துறைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் வேண்டும் என, யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கல்வியியலாளர் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

வளர்ச்சியடைந்த நாடுகளில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, அதிகமானதாக உள்ளது. பரீட்சைக்குத் தோற்றுவோரில், 50 வீதமானோர் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர்

ஆனால், இலங்கையில் க.பொ.த. உயர்தரத்தில் தோற்றுவோரில், இரண்டு வீதமானோர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர்.

எமது பல்கலைக்கழகம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இயங்கி வருகின்றமை அனைவரும் அறிந்ததே. எனினும், தமிழ் மாணவர்கள் மேலும பலர் அனுமதிக்கப்பட்டு, பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எமது நாட்டை அபிவிருத்தி அடையச் செய்யவேண்டுமாயின் - பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் வேண்டும்.

எமது நாட்டிலிருந்து, கூலி வேலைக்காக வெளிநாடு செல்வதைவிட, உயர்பதவிகளை வகிக்கச் செல்வதே எமக்குப் பெருமை. எமது நாட்டுப் பல்கலைக்கழகங்கள் - தொழில்நுட்பத்துறையில் வளர்வதன் மூலமே, எமது சமுதாயத்தின் தரத்தையும், ஆற்றலையும் உயர்த்தமுடியும்.

உலகநாடுகளிலிருந்து, எமது நாடு பின்தங்கி இருப்பதற்கும் - தொழில்நுட்ப அறிவை நமது மாணவர்கள் பெறாமையே காரணமாகும்.

இன்று வெளியிடப்படும் இந்நூலில் - எமது மாணவர் எத்தகைய அழுத்தங்கள், சிரமங்கள் மத்தியில் தமது கல்வியை முன்னெடுக்கின்றனர் என்பது வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இத்தகைய நூல்கள் தொடர்ந்தும் எமது சமுதாய முன்னேற்றத்திற்கு உதவும் வகையில், பல நல்ல ஆக்கங்களை உள்வாங்கி, வெளிவருதல் வேண்டும் என்றார்.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் சபா.ஜெயராசா தனது உரையில் -

இன்று கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் ஆசிரியர்கள் - மிகவும் தரம் மிக்கவர்களாகவும், சிறந்த கற்பித்தல் ஆற்றலுடையவர்களாகவும் விளங்குகின்றார்கள்.

அந்த ஆசிரியர்களின் ஆக்கமான இந்தநூலும், தரம் மிக்கதாகவே அமைந்துள்ளது என்றார். (ப)

# எழுவைதீவு பிரதேசத்துக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவு பிரதேசத்திற்கு வெகு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இங்கு, அனலைதீவிற்கு முன்னர் மின்சாரம் வழங்கிய - மின்பிறப்பாக்கியை சீர்செய்து கொண்டுவந்து பொருத்தி, அதன் மூலம் மின் வழங்கப்படவுள்ளது என்றும், அதற்குரிய ஆரம்பப்பணிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மின்சாரம் வழங்குவதற்கென இரண்டு வருடங்களுக்கு முன்னரே இலங்கை மின்சாரசபையினரால், இந்தப்பகுதி இளைஞர்களின் உதவியோடு மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன.

மேலும், இந்ததீவிற்கு பகுதி நேர மின்சாரமே வழங்கப்படவும் உள்ளது. தற்பொழுது மின்சார வசதியற்ற ஒரேயொரு தீவாக எழுவை தீவு மட்டுமே இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (83)

# பயணிகள் பஸ் குடைசாய்ந்தது ஒலுமடுவில் நான்குபேர் காயம்

முல்லைத்தீவு - மல்லாவியிலிருந்து, முள்ளியவளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த, பயணிகள் பேரூந்து ஒன்று குடைசாய்ந்ததில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில், ஒலுமடுப்பாலத்தில் இடம்பெற்றுள்ளது. காலை 7 மணிக்கு மல்லாவியிலிருந்து, முள்ளியவளைக்குச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேரூந்தே இந்த விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது, பேரூந்தில்ப் பயணம் செய்த பயணிகளில் - நான்கு பேர் காயமடைந்துள்ள நிலையில், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## விபத்தில் போராளி வீரச்சாவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்பாராத விபத்தொன்றில் போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

சில்லாலை மாதகலைச் சேர்ந்த வேதன் அல்லது சுதன் என்று அழைக்கப்படும் நவரத்தினம் மதிகிருஷ்ணகரன் என்பவரே வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் கிறிஸ்தவ மாணவர் மன்றம் நடாத்திய, ஒளிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை வெற்றி பெற்ற மாணவனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (91)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கணினிகள் அன்பளிப்பு

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு, கனடா பழைய மாணவர்சங்கக்கிளை - பதினைந்து கணினிகளை அன்பளிப்புச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கணினிகளைப் பாடசாலை ஆசிரியர் வவுனியாவிற்கு சென்று எடுத்து வந்துள்ளதாகவும், இவை விரைவில் மாணவர்களின் கற்றல் பயன்பாட்டிற்கு வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது. (83)

## கடல்வளம் தொடர்பான கருத்தரங்கு

“கடல்வாழ் ஆரோக்கிய உணவும், போஷாக்கும்” தொடர்பான இலவச கருத்தரங்கு - நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப. 2.30. மணி தொடக்கம் 5.30 மணி வரை யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்னை எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த, செல்வி சி.வேல்விழியால் நடாத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கில், ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றிப் பயன்பெறலாம்.

## கோம்பயன்மணல் மயானத்தில் மோட்டார் சைக்கிள் மீட்பு

யாழ்.கோம்பயன்மணல் மயானத்தில், அநாதரவாக காணப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் அதிகாலை, இந்தப் பகுதியில் 500 - 3374 சுப்பர்கப் மேல் சிவப்புநிற மோட்டார் சைக்கிள், மயானவாயிலில் நிற்பதை அவதானித்த மயானக் காவலாளி, யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு தெரிவித்தார். யாழ்.பொலிஸ் நிலைய பொலிஸாரினால், பகல் 1 மணியளவில் மீட்டுச்செல்லப்பட்டது. மோட்டார் சைக்கிளின் திறப்பு மோட்டார் சைக்கிளில் இருந்தது. இந்த இந்து மயானத்திற்கு பகல் மட்டுமே காவலாளி கடமையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (91)

# எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக - தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவு நடத்துகின்ற உதைபந்தாட்டப் போட்டி யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில், இன்று மாலை 2.30 மணிக்கு ஆரம்பகமாகவுள்ளது. இந்தப்போட்டியில், மொத்தம் 53 விளையாட்டுக் கழகங்கள் மோதவுள்ளன. இந்த ஆரம்பநிகழ்வுக்கு - யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் தேசியக் கொடி ஏற்றி விளையாட்டினை ஆரம்பித்து வைப்பார்.

அன்றைய தினம் வலிகாமம் சென்தோமஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து - வல்வை விளையாட்டுக் கழகமும், வலிகாமம் கல்வளை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் மோதும் என, விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : ஜெ.ஜெயானிகா
முகவரி : யாழ்ப்பாணம்.

### நான்காவது அகவையில்



பெயர் : மோ.நிருசன்
முகவரி : அராலி மத்தி.

### ஏழாவது அகவையில்



பெயர் : ந.அனுஷாந்
முகவரி : 'துவாரகை', நெடுந்தீவு.

### பதினோராவது அகவையில்



பெயர் : து.பிரகாஸ்
முகவரி : அல்வாய் வடக்கு, அல்வாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி :----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------

பெற்றார் ஒப்பம்

# இலக்கியச்சோலை

# மாறும் உலகில் மாறா மனிதர்கள்

பொழுது இன்னும் நன்றாக விடியவில்லை. மார்கழி மாதக் குளிர் உடலை விறைக்க வைத்துக் கொண்டிருந்தது. எங்கோ ஒரு தெருநாய் ஓலமிடும் ஓசையும், பறவைகளின் 'கீக்கி' சத்தமும் கேட்கத் தொடங்கிவிட்டன. தூரத்தே ஏதோ ஒரு வாகனம் தெருவால் போகும் ஓசை...

தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த கடிகாரத்தின் அலரம் அடிக்கத் தொடங்கி விட்டது. நேரம் நாலரை எனக் காட்டிய வண்ணம் இருக்க, அறையின் மூலையின் பாயில் சுருண்டு கிடந்த விமலன் அவசரமாகக் கண்ணைத் துடைத்தபடி எழுந்தான். மூலையில் அழுது வடிந்த லாந்தரின் ஒளியில் தம்பி கண்ணன், விமலனின் அசைவால் துக்கம் கலைய தலையைச் செறிந்துவிட்டு மறுபக்கம் திரும்பிப்படுப்பது அழகாகத் தெரிந்தது.

அம்மாவின் இடத்தைப் பார்த்தான். அது காலியாக இருந்தது. தாய் எழுவதற்கு அடையாளமாகப் பாய் ஒரு மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. கிணற்றடியிலும் வாளியின் ஓசை கேட்டது.

'அம்மா பாவம்' என வாய்க்குள் முணுமுணுத்தபடி பாயைச் சுருட்டி விட்டு வெளியே வந்தான். அவன் வரவும், பார்வதி கிணற்றடியில் இருந்து வீட்டுக்குள் வரவும் சரியாக இருந்தது. விடிய ஆறரை மணிக்கிடையில் தோசை சுட்டுக் கடைக்குக் கொடுக்க வேண்டும்.



கணவனை இழந்த பார்வதி தன் மகனை அதுவும் குறிப்பாக விமலனை வருங்காலத்தில் ஒரு பெரியதொரு அந்தஸ்தில் வரச்செய்ய வேண்டுமென்று ஆவலில், தன் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது பாடுபடுவது அவன் அறிந்த உண்மை. அவனும் சோடை போகவில்லை. படிப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். 5 ஆம் வகுப்பில் நடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்டத்திலேயே முதல் மாணவனாக வந்தது குறிப்பிடத்தக்கது. சென்ற கிழமை நடந்து முடிந்த சாதாரண தரப்பரீட்சையும் நன்றாக எழுதியிருந்தான். இன்னும் சில மாதங்களில் முடிவு தெரிந்துவிடும்..

அந்த முடிவைப் பார்வதி மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

விமலனின் தாய் பார்வதியின் கதை பெரியகதை. அவள் ஒரு பணக்கார வீட்டுப் பெண். இளமையில், துள்ளித திரிந்த பருவத்தில் இன்பவானில் சிறகடித்தவள். ஒருமுறை தண்ணீரக்குழாயில் ஏற்பட்ட ஒருசிறு தகராறைத் திருத்துவதற்காகத் தந்தை அழைத்து வந்த சுந்தரத்தைக் கண்டாள். இளமையின் அழகில் மயங்கியவள் ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் தன் நகை, பணத்துடன் அவன் கொண்டு வந்த காரில் கம்பி நீட்டியதும் பழங்கதை. வீட்டிலிருந்து புறப்பட்டவளை அவள் குடும்பம் பின்பு ஏற்கவில்லை. ஆரம்பத்தில் காதல் வாழ்க்கை நன்றாக இனித்தது. ஆனால் நாள் போகப்போக நல்லவன் போல் இருந்த சுந்தரம் ஒரு உதவாக்கரை என அவன் போக்கில் கண்டுவிட்ட பார்வதி தான் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதை உணர்ந்தபோது திகைத்துத் தான் போனாள். துன்பமென்றால் இன்னதென்று தெரியாமல் வளர்ந்தவள், தானே தனக்கு மண் அள்ளிக் கொட்டிக்கொண்டுவிட்டோமே எனக் கலங்கினால். அவன் நோக்கமே தன் பணந்தான் எனப் புரிந்துகொண்டாள்.

அவனுடன் வாழ்ந்த 10 வருட வாழ்க்கையில் அவள் கண்ட சுகம் இந்த இரண்டு குழந்தைகளே. அவள் வந்த சில காலங்களிலேயே அவள் பெட்டி காலியாகிற்று. தோசைச் சட்டி தூக்க வேண்டியதாயிற்று. தினம் தினம் நிறைவெறியில் வரும் அவன் அவளை அடிப்பதும் உதைப்பதும் வேண்டாத வார்த்தைகளால் வைவதும் அன்றாட நிகழ்வுகளில் நிரந்தரமாச்சு.

விமலன் சிறுபிள்ளையாக இருந்தாலும், தந்தை செய்யும் கொடுமைகளையும் - தாய் அவனால் படும் இன்னல்களையும் கண்டு மனதுக்குள் கொதித்துப் போவான். எடுத்ததுக்கெல்லாம் உதைக்கும் தந்தையின் அண்மையே அவனுக்கு வேம்பாயிற்று. விமலனின் படிப்பில் அக்கறை காட்டுவதும் சுந்தரத்திற்கு எரிச்சலைத் தரலாயிற்று. அதனாலும் பார்வதிக்கு அடிகிடைத்தது. "அவனுக்கு என்ன படிப்பு வேண்டிக்கிடக்கு? பெரிய ராசா வீட்டுப் பிள்ளையே? சும்மா எங்கேனும் வேலைக்கு விடு, உவனை வளர்க்க என்னாலை ஏலாது"

அடிக்கடி இப்படிச் சொல்லிச் சொல்லி வந்தவன் ஒரு நாள் ஏதோ தவறு செய்ததற்காக விமலனைப் பிடித்து கையில் இருந்த விளக்குமாறால் ஒரு ஆண்பிள்ளை என்ற எண்ணங்கூட இல்லாமல் விமலன் குழறக் குழற தன ஆத்திரம் தீர விளாசி விட்டான். ஈககுகள் கூட அவன் உடமபில் ஏறியும் விட்டன. இந்த நிகழ்ச்சியால் பார்வதி கலங்கிப்போனாள். அன்றுபூரா அழுத மகனுக்கு ஒத்தடம் கொடுத்தும், எண்ணெயைப் பூசியும் ஆறுதல் சொல்லி அன்று பூராத்தானும் சேர்ந்து அழுதாள். தன் வயிற்றில் பிறந்ததற்காக இப்படியும் ஒரு தண்டனையா? எனக் குமுறினாள்.

மறுநாளே இதற்கொரு முடிவெடுப்பது என அவள் கங்கணம் கட்டிய வேளை, அதை ஆண்டவனே உணர்ந்தது போல அன்று இரவு குடிபோதையில் கிடந்த அவனைப் பாம்பு தீண்ட இரண்டொரு நாட்கள் ஆஸ்பத்திரியில் கிடந்து கண்ணை மூடி பார்வதிக்கு விடுதலை கொடுத்தான். கணவன் இறப்புக்காக அவள் வருந்தினாளா? இல்லையா? என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

ஆனாலும், தன் கொள்கைகளைக் கைவிடவில்லை. எப்படியும் தன் மகனை சபையின் கண்முன் இருக்கையில் காண வேண்டும் என்ற எண்ணம் மட்டும் மாறவில்லை. அது மேலும் பெருகலாயிற்று.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. சோதனை நடந்து 6 மாதங்கள் முடிந்துவிட்டன. எப்போ வரும் எப்போ வரும் என எதிர்பார்த்த மறுமொழியும் வந்துவிட்டதாகவும், "இன்டர் நெட்" டில் பார்ப்பதாகவும் அறிந்து பார்வதி நம்பரைக் கொடுத்துவிட்டு துடிப்புடன் காவல் இருந்தாள். இதயமே நின்றுவிடும் போலிருந்தது.

பார்வதியின் தவிப்புக்கு நல்ல பதில் கிடைத்தது. 10 A யுடன் விமலன் பாடசாலையிலேயே முதல் மாணவனாக சித்தியடைந்த விபரம் பார்வதியை வான் மட்டத்திற்கு அழைத்துச் சென்றது. அன்று சில மணிக்கிடையில் எங்கும் செய்தி பரவியது. அதிபரும், ஆசிரியருமாகப் படையெடுத்தனர். தெரிந்தவர்கள் வாழ்த்தினர். தான் பட்ட கஷ்டத்திற்கு விடிவு கிடைத்ததாக பார்வதி சந்தோசத்தில் மிதந்தாள்.

அன்று பாடசாலையில் பரிசளிப்பு விழாவும், பாராட்டு விழாவும் விமலனுக்கு ஏற்பாடாகியிருந்தது. அன்று மாலை நாலுமணிக்கே தாயையும், தம்பியையும் அழைத்துக்கொண்டு பாடசாலைக்குச் சென்றிருந்தான். பாடசாலை விழாக் கோலம் பூண்டிருந்தது. பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது. பலவர்ணக் கொடிகளாலும், பலவர்ணவிளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட, விமலனின் பெயரும் பெரிதாக மாட்டப்பட்டிருந்தது. விமலனின் பெயர்ப் பலகையை பெருமையுடன் பார்த்த பார்வதிக்கு இத்தனை கொண்டாட்டமும் தன் மகனுக்காக என எண்ணிய போது, சந்தோசத்தால் அவள் உள்ளமே பூரித்துப் போச்சு.

பாடசாலையின் தோட்டத்திலிருந்த மலர்களின் சுகந்தம மாலை நேரத்தில் தென்றலோடு கலந்து வந்து அவள் நெஞ்சை மேலும் தாலாட்டியது.

இனம் புரியாத மகிழ்ச்சியில் பக்கத்தில் வந்து கொண்டிருந்த மகனின் விரல்களை பாசம் பொங்கப் பற்றினாள்.

திடீரென்று தாயின் ஸ்பரிசத்தால் உந்தப்பட்டவனாய் விமலன் சட்டென்று தாயின் பக்கம் திரும்பினான். தாயின் உணர்ச்சி வெள்ளம் அவனுக்கும் புரிந்துவிட்டது. ஆனால் தாயின் விழிகளில் சிறிது கலக்கத்தையும் காண தடுமாறித் தான்போய்விட்டான். பதற்றத்துடன் என்னம்மா? ஏனம்மா ஒரு மாதிரி இருக்கே...

சிறிது கலவரத்துடன் கேட்ட மகனை திரும்பிப் பார்த்தவள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, தன் கண்களின் தவிப்பை மகன் புரிந்துவிட்டான் என்ற ஆதங்கம் பொங்க சிறிது வெட்கமுற்றவளாக குனிந்தவள - இல்லை விமல் உன் அப்பாவை நினைத்தேன் அதுதான். அப்பாவையா...? ஈனஸ்வரத்தில் கேட்டவன் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை.

தாயின் உணர்வைப் புரிந்தவன் அந்த நேரத்தில் தன் ஆறுதல் தேவை என உணர்ந்தவனாகத் தாயின் கரத்தைப் பாசத்துடன் பற்றிக்கொண்டு, விழா நடக்கவிருந்த மண்டபத்தை நோக்கி நடந்தான். மகனின் பரிவில் பார்வதி அவனைப் பின் தொடர்ந்தாள்.

விமலுக்குப் பரிசுகளும், பாராட்டுகளும் கிடைத்தன. யார்... யாரோ பேசினார்கள். வாழ்த்தினார்கள் . விமலனைப் போல் எல்லோரும் சிறந்த மாணவனாகத் திகழவேண்டுமென்று அதிபர் மாணவரிடம் வேண்டிக்கொண்டார். முடிவில் விமலன் மேடையேறினான். பார்ப்பதற்கு இப்பொழுதே பெரிய அந்தஸ்தில் இருப்பவன் போல் காணப்பட்ட மகனின் தோற்றம், பார்வதி தான் பெற்றபலனையடைந்துவிட்டோம் என்ற ஒரு திருப்தியையளித்தது.

மேடையில் ஏறிய விமலன் முதலில் எதையோ பேசிவட்டு இறுதியில் இத்தனைக்கும் காரணமான என் தாயாரை இங்கே அழைத்து அவரிடமே இப்பரிசுகளைக் கொடுக்கப் போகிறேன். இதற்கு அனுமதிக்க வேண்டும் என்று அதிபரைக் கேட்ட, அதிபரும் சம்மதிக்க அடுத்த கணம் பார்வதி மேடையில் நின்றாள்.

மகனை ஆரத்தழுவினாள். மகன் கொடுத்த பரிசில்களை ஆவலுடன் வாங்கினாள். கண்களில் ஒற்றிக்கொண்டாள். இதைப் பார்த்த எல்லோரும் விழிகளிலும் அந்தத் தாயின் பெருமையை நினைத்து ஆனந்தக் கண்ணீர் கசிந்தது. எப்படியோ சிரிப்பும், கவலையுமாக விழா முடிந்தது.

அன்று இரவு 10 மணி இருக்கும். விழாவால் வந்த களைப்பில் தூங்கிக்கொண்டிருந்த விமலன் திடீரென்று தாயின் படுக்கைப் பக்கம் முனகல் ஒலி கேட்டு துடித்துப் பதைத்து எழுந்தவன், சட்டென்று லாந்தரின் திரியைத் தீண்டிவிட்டு தாய் அருகே பாய்ந்தான். தாய் நெஞ்சைப் பொத்திக் கொண்டு அப்படியும் இப்படியும் புரளுவதைப் பார்த்துப் பதற்றத்துடன்

என்னம்மா? என்னம்மா என அவளை அணைத்துத் தூக்கினான்.

பார்வதி வேதனையுடன் மகனைப் பார்த்தான். தம்பி... தண்ணீர்... தண்ணி ஏன்று முனகினான்.

பக்கத்தில் கூசாவில் இருந்த தண்ணீரை எடுத்து தாய்க்குப் பருக்கினான். அவன் கரங்கள் பதறின. இரண்டு, மூன்று தரம் விழுங்கியிருப்பாள். அவ்வளவுதான். அவள் தலை சாய்ந்தது. தாயின் நிலை புரிந்து அடுத்தகணம் அவன் போட்ட சத்தத்தில் ஊரே கூடிவிட்டது.

பிறகென்ன, பார்வதி மறைந்து இரண்டு வாரத்திற்கு மேலாகிவிட்டது. எதிர்பாராத தாயின் பிரிவால் விமலன் ஆடித்தான் போய்விட்டான். அவனால் தாயின் பிரிவைத் தாங்கவே முடியவில்லை. அதோடு அவள் அவனுக்குள் ஏற்றிவிட்டுப் போன இலட்சியத்தையும் மறக்கவில்லை. அம்மாவின் ஆசைப்படி நான் பெரியதொரு அந்தஸ்துக்கு வரவேண்டும். என்ன மாறினாலும் கொள்கை மாறக்கூடாது.

அன்று இரவு விமலனுக்குத் தூக்கம் வரவில்லை. எதிர்கால வாழ்வுக்கு இனிமேல் அவனே பாடுபட வேண்டும். யோசித்தவன் முடிவெடுத்தான்.

மறுநாட்காலை விமலன் தோசைக் கடை முதலாளியிடம் போனான். கடையில் யார், யாரோ நின்றிருந்தனர். விமலன் காவல் நின்றான். சிறிது நேரத்தில் கூட்டம் கலைய முதலாளி அவனை நெருங்கினான்.

தம்பி, என்னமாதிரி அம்மாவுடன் தோசை வேலையும் போயிற்று. அதுதான் நான் உன்னைக் கண்டு அம்மாவின் பிசகை வெட்டிவிட்டு, வேறு யாரையாவது அமர்த்தி தோசைக்கு ஓடர் கொடுக்க யோசித்தனான். நல்ல வேளை நீயே வந்துவிட்டாய் என்றார்.

முதலில் விமலனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஆனாலும் தைரியத்தை வரவழைத்தவன்,

ஐயா, நீங்கள் சம்மதித்தால் நானே தோசை சுட்டுத் தருகிறேன். எனக்கு சுடத்தெரியும்.

ஏதோ ஹாஷ்யத்தைக் கேட்டவன் போல் முதலாளி சிரித்தார். என்ன தம்பி, உன்ரை தோசையை மனிசர் சாப்பிடுவினமே.

இல்லை ஐயா... நீங்கள் சோதித்துத்தான் பாருங்களேன். விமலனின் கட்டாயத்தால் முதலாளி அரைமனதோடு தான் சம்மதித்தார். அவருக்கு நம்பிக்கையில்லை.

மறுநாள் விமலன் தோசை கொண்டு வந்து கொடுத்தான். முதலாளிக்கு வியப்புத் தாழவில்லை.

நீ படிப்பில் தான் கெட்டிக்காரன் என்றால் தோசை சுடுவதிலும் கெட்டிக்காரனாகத்தான் இருக்கிறாய்.

தோசையை கடைக்கு வந்தவர்கள் பாராட்டினார்கள். அன்று மாலை முதலாளி அவனது தோசைக் காசை அவனுக்குக் கொடுத்தபோது, விமலனுக்கு சந்தோசம் தாழவில்லை.

தன் வருங்கால இலட்சியத்தின் முதற்படியே இந்தக் காசுதான் என எண்ணியவனாக வாழ்க்கையின் பாதைக்கு வழி கண்டுவிட்டதாகக் கருதியவன், ஒரு இறுமாப்புடன் நடக்கத் தொடங்கினான்.

எங்கிருந்தோ ஒரு ரேடியோவில் இருந்து "துணிந்து நில், தொடர்ந்து செல், தோல்வி கிடையாது தம்பி" என்று பாடுவது கேட்க தனக்காகவே பாடுவதாக நினைத்தபடி மேலும் நடக்கத் தொடங்கினான்.

**கனகமணி சாம்பசிவம்**

# நூல் அகம்

## தமிழ்மொழியும் இலக்கியமும்




மனித வாழ்க்கைப் பங்கின் கூட்டுத் திரட்சியாக, பண்பாட்டின் குறியீடாகத் தாய்மொழி உள்ளது. இன்றைய மாணவர்களுக்குத் தாய்மொழித் தேர்ச்சி போதுமானதாக இல்லை. தாய்மொழித் தேர்ச்சியைச் சிறப்பாகக் கொண்ட மாணவன் - எல்லாப் பாடங்களிலும், வாழ்க்கைத் தேர்ச்சியிலும் நிறைவடைவான்.

இதற்குப் பல்வேறு பரிமாணங்களில் புதிய நூலாக்கங்கள், வெளியீடுகளின் தேவைகள் பெருகியுள்ளன. இதற்கமைய தரம் 8 மாணவர்களின் தமிழ்மொழத் தேர்ச்சிகளைப் பெற, சிறந்த வழிகாட்டி நூலாக தமிழ மொழியும் இலக்கியமும் என்ற செயல்நூல் வெளியாகியுள்ளது.

இந்நூலை சிறந்த ஆசிரிய வண்மையாளரும், தமிழ்மொழி கற்பித்தலில் நீண்டகால அனுபவமுடையவரும், இலக்கியவாதியுமான தி.உதயசூரியன் எழுதியுள்ளார்.

எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள், எழுத்துறுப்பு, அடிப்படை இலக்கணப் பிழைகள் விடுதல், மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் பொதுவாகக் காணப்படும் குறைகளாக உள்ளன. இந்தக் குறைகள் மிகப் பாராதூரமானது. இவற்றை தரம் 8 மாணவர்களிடையே நீக்க, நவீன மொழியியல் பிரவேசங்களைக் கொண்ட சிறந்த நூலாக இந்நூல் உள்ளது. நூலாசிரியரின் மொழியியல், விஞ்ஞான, உளவியல்ரீதியான அணுகுமுறைகள், பாராட்டப்படவேண்டியன.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக இந்த நூல் விளங்குகின்றது.

இடைநிலைக் கல்விப் பாடசாலைகளில் பயிலும் தரம் 8 மாணவர்களின் உளவயது, திறன்கள், மனப்பாங்குகள், விருப்பங்கள், தேவைகள் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு, தாய்மொழிக் கலைத்திட்டப் பிரயோகங்களாக 25 தலைப்புக்களில் புதிய கற்றல் அணுகுமுறைகளுடன் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மொழியியல் சிந்தனைகளைக் கிளரும் படங்கள், வினாக்கள், விடயங்கள், பாடலகள், கணிப்பான்கள், ஆய்வுக் கருவிகள், தொடர்பாடல் எண்ணக் கருக்கள் எனப் பல்வேறு நுட்பமுறையியல்கள் மூலம், தாய்மொழித் தேர்ச்சியை மாணவர் விருப்புடன், தாமாகவே பயிலும் திறமுறைகளையும் இந்த நூல் இயம்புகிறது. சர்வதேசரீதியான மொழியியல் விருத்தி, நுட்பமுறைகள், மொழித் திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றின் குறியீட்டுப் பிரவேசங்கள், அமைப்பாக்கங்கள், அகல்விரிநுட்பங்கள் இதுவரை வெளிவந்த மொழித்திறன் விருத்தி நூல்களிலிருந்து விலத்தி, உயர்த்திக் காட்டுகின்றன.

மேலும், நூலாசிரியர் செயல்நூலை - மாணவர்களே கற்க, கற்றல் தேர்ச்சியினூடு, தாமாகவே கற்றுயர பெரும்பாலான நுட்ப முறையியல்களைக் கையாண்டு காட்டியுள்ளார்.

பெரும்பாலான மாணவர்கள் வலதுகையால் எழுதுகிறார்கள், சிலர் இடதுகையால் எழுதுகின்றனர். ஆனால், இந்நூலின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு வினா, புதிய நுட்பமுறையைக் கையாண்டுள்ளது. அதாவது, குறித்த பகுதியை வலது கையால் எழுத ஆற்றலுள்ள மாணவர்களை- இடது கையால் எழுதவும், இடதுகையால் எழுதக்கூடிய மாணவர்களை - வலதுகையால் எழுதவும் வழிகாட்டியுள்ளார்.

இன்றைய புதிய மனிதன் இரு கைகளையும், மூளையின் இரு பகுதியையும் பயன்படுத்தும் தேர்ச்சியைப் பெறவே, உலகக் கல்வி செல்நெறியாகவுள்ளது. அதற்கும் இந்நூல் வழிகாட்டுவது மிகவரவேற்கப்படவேண்டிய விடயம். இந்த விடயத்தில் நூலாசிரியர் தன் முத்திரையைப் படைத்துள்ளார். தரம் 8 மாணவர்களின் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய நயத்திற்கும், அழகியல் ரசனைக்குமான மொழியியல் எண்ணக்கருக்களையும் இந்நூல் கொண்டுள்ளது.

மொழியியல் சார்ந்த பல்வேறு நுட்பவியல் எண்ணக் கருக்களைப் பயன்படுத்தி, மாணவர்களுக்குப் பயன்படும் வண்ணம் நுண்ணியதான வினாக்கள், சரியீட்டுப் பட்டியல்கள, கணிப்பீட்டு கருவிகளை உருவாக்கி, அகல்விரிபண்புகொண்ட பயிற்சி நூலை - நூலாசிரியர் மிகுந்த அர்ப்பணிப்புடனும், தியாகத்துடனும் ஆற்றியுள்ளமை பாராட்டுக்குரியது. அறிகையாட்சி, எழுச்சியாட்சி, ஆக்கத்திறன், படைப்பாற்றல் மேம்பாட்டுக்குரிய மொழியியல் வெளிப்பாடுகள் ஒவ்வொரு பகுதியிலும் பிரகாசிக்கிறது.

### மொழியியல் கணிப்பீட்டு உத்திகள்

கணிப்பீட்டு உத்திகள் என்ற மொழியியல் எண்ணக்கரு- மாணவர் மொழிப்பாடம் கற்கையில் ஆசிரியரும், அவர்களோடு, உடனிருந்து அவர்களது மொழிதிறன்களையும், திறன் இன்மைகளையும் உசாவியறிந்து, அவர்களுக்குத் தேவையான வழிகாட்டலை வழங்குதல் எனப்படுகின்றது. இவ்வழிகாட்டலை இந்நூல் விளக்குகின்றது.

பலவகை உத்திகளை நூலில் காணக்கூடியதாக உள்ளது. மரபுவழி எழுத்துப்பரீட்சையைவிட, புதியவகை கணிப்பீட்டுக் கருவிகளும் நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கல்வித்துறையில் உயர்வளர்ச்சி கண்ட அமெரிக்க நாட்டில் வெற்றிகரமான கணிப்பீட்டு கருவியாகவுள்ள சிறந்தநூல்- கணிப்பீட்டுக் கருவி முறமையை நூலாசிரியர் பிரயோக ரீதியில் எடுத்தாளப்பட்ட விதத்தையும் பாராட்டவேண்டும்.

நூலாசிரியருடைய புதிய நுட்பமுறைக் கண்டுபிடிப்புக்கள், அனுபவப்பகிர்வு, ஆளுமை வெளிப்பாடு, சேவை நோக்கு என்பவையெல்லாம் - இந்நூலின் ஊடாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

நேர்த்தியான அச்சுப் பதிப்பு, அழகான பார்வைக்கேற்ற எழுத்தொழுங்கு, தெளிவு, நூலின் உயிர்ப்பான அட்டைப்படம் எல்லாம் மேலும் இந்நூலுக்கு அணிசேர்க்கின்றது.

அவர் தனது ஆற்றல்களை- ஆசிரியர், மாணவசமூகத்துக்குப் பயன்படும் இவ்வாறான புதிய நூல்களை வெளியிடும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். இளம் மாணவர் சமூகம்- தாய்மொழித் தேர்ச்சியும், தேசப்பற்றுக் கொண்ட எதிர்காலப் பிரஜைகளாக வளர, இந்நூலைப் போன்ற புதிய ஆககங்கள் வருவது இன்றைய அவசிய தேவையாக உள்ளன.

**பா.தனபாலன், உபபீடாதிபதி**
**யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி.**

# கிழக்கும் மேற்கும்

## புலவர் தருமி - கவிஞர் பீர்தௌசி



கிழக்கினில் அன்று புலவர் ஒருவர்
இயற்றிய பாடலைப் போற்றிய மன்னவன்
தாம் முன்னர் அளித்த வாக்குறுதிப்படியே
ஆயிரம் பொன்களைக் கொடுத்து உயர்ந்தான்!
மேற்கினில் அன்று கவிஞர் ஒருவரின்
பாடலை மன்னவன் போற்றவு மில்லை!
கவிஞருக்கு களித்த வாக்குறுதிப் படியவன்
பரிசாகப் பொன்னைக் கொடுக்கவு மில்லை!!

மதுரையம் பதிவளர் சோம சுந்தரர்மேல்
மாற்றரும் அன்பும் சாற்றரும் பக்தியும்
கொண்ட "வம்மிச சூடாமணி" எனும்
பாண்டிய வேந்தன் ஓர் சம்பக வனத்தைப்
படைத்துக் கொண்டு பரமனைப் பரவினான்!
பூக்களைக் கொய்ததில் பல்வகை மாலைகள்
புனைந்தெடுத் தவைகளைச் சோம சுந்தரர்க்குச்
சாத்தி மகிழ்ந்தான்! அழகினிற் திளைத்தான்!!
பாண்டியன் ஒருநாள் அந்தி மாலையில்
தன்தேவி யுடனே சம்பக வனத்திலோர்
சந்திர காந்தக் குன்றில் இருந்தான்!
நறுமணம் கமழ்ந்திடும் தென்றற் காற்றுத்
தவழ்ந்து வந்தவனைத் தழுவிச் சென்றது!
"தென்றலில் வந்ததோர் புதுவித நறுமணம்!
சோலையி லிருந்தது வருகின்ற போது
தென்றற் காற்றுடன் கலந்ததும் அல்ல!
எவ்விடத் திருந்தது என்னிடம் வந்தது?"-
என்று நினைத்தவன் தேவியைப் பார்த்தான்!
அவளின் கூந்தலில் நறுமணம் கமழவே
"இந்த வாசனை வண்டறிந்திராத
ஒன்றுதான் போலும்" என்று நினைந்த
பாண்டியன் "தனது தேவியின் கூந்தலில்
தவழ்ந்திடும் நறுமணம் இயற்கையோ? இல்லையேல்
செயற்கையோ?" என்றே ஐயம் கொண்டான்!
"இந்த என் ஐயம் தீர்ந்திடும் வண்ணம்
எவரே ஆயினும் பாடல் செய்தால்
அந்தப் புலவர் ஆயிரம் செம்பொன்
பரிசி லாகப் பெற்றிடத் தக்கவர்"
என்று அறிவிப்புச் செய்ததோ டாயிரம்
பொன்னைக் கொண்ட பொற்கிளி யொன்றையும்
தமிழ்ச் சங்கத்தில் தூக்கிடப் பணித்தான்!
சங்கப் புலவர்கள் முயன்று தோற்றனர்!

(தொடரும்)

**முருகு**



## ஒரு அகதியின் அவலம்

மாடிமனைகள், கோவில் குளங்கள்
பாடித்திரிந்த வயல்வெளிகள்
முற்றத்து வெளியில்
கிளித்தட்டு மறித்துப் பெற்ற
காய், பழங்கள்
மாலை ஏழு மணி என்றவுடன்
அரட்டையடிக்கும் ஆலமரக்கட்டு
களிப்பூட்டும் வெள்ளையண்ணையின்
நீள்பனைக் கள்ளு
செல்லாச்சியின் பழஞ்சோத்துத் தண்ணியும்
பனம் பினாட்டும்
இன்னும் என்னென்னவோ
எல்லாம்.......
என் நினைவுகளில் நின்று
நிழலாடி மறைகின்றன - இப்படி
எத்தனை ஊர்களை இழந்து வந்தோம்-
இன்னும்
இதயவலி குறையவில்லை.

இருள் மெல்ல மெல்ல
கௌவிக்கொள்கிறது...
ஆலமரத்தின் விழுதினைப் பிடித்தபடி
மண்ணிலே மெல்ல
சுருண்டு படுக்கிறேன்
அப்பா! என்று - எனது
பிஞ்சு வயது மகனின்
ஆவேசக் குரல் செவிப்பறையை முட்டுகிறது.
துயில் கலைகிறது
அவனது கையிடுக்கிலிருந்த பொம்மை
மெல்ல விழுகிறது.
பிடியுங்கள் - அந்தச் சூரியனை
இந்தப் பயங்கர இருளுக்கு -
ஒரு முற்றுப்புள்ளி வைப்போம்
என்றான்.

**முருகையா சுதேசிகன்**

# கவிதைச் சோலை

## சக்தி



கால்களின் வேகங்களால்... நெடுந்தூரத்தைக்
கடந்திருந்தேன்.
களைப்புகளென்னை ஆட்கொள்ளவில்லை.
கைப்பிடித்தழைத் திதுதானுன்னிடம் எனக்காட்டும்
முகங்களினுதவியெதுவும்
கிடைத்திருக்கவில்லை.
ஏதோவோர் உணர்வெந்தன்,
இயக்கத்தை நெறிப்படுத்துவதாயுள்ளது.
காற்றள்ளித் தின்னும் காவியமுமென்னால்.....
ஆற்ற முடியும் போலுள்ளது.
எதையும் எதிர்கொள்ளும் திராணியை
ஏதோவோர் "சக்தி" என்னுட் திணித்துளது.
காலங்களையென் கரங்கள்
கட்டுமளவுக்கான பலம்,
எங்கிருந்தோ வந்தென்னில்... நிரம்பிற்று.
எல்லைகளை எதிர்பார்த்த காலங்கள்...
இப்போதெனக்கு விடைகொடுத்திருந்தது.
எல்லைகளாய்... நானேயாகியிருக்கிறேன்.
காலங்கள் பூட்டப்பட்ட சிறையுள்; விடுதலைக்காய்...
காத்திருக்கின்றன.
நானோ? இந்நாளி லதன் விதியை,
நிர்ணயிக்கும் நிலையிலுள்ளேன்!

**சு.க.சிந்துதாசன்**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்*
*தண்பதத்தான் தானே கெடும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# நிலைகுலையும் சமாதான சூழல்

அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்படவில்லை எனவும், அப்படி பிரகடனம் செய்யப்பட்டதாக வெளிவந்த செய்திகள் வதந்தி என்றும், ஜனாதிபதி தரப்பில் இருந்து அறிவிக்கப்பட்ட போதிலும், பிரகடனம் செய்யப்படாத - பகிரங்கமாக அறிவிக்கப் படாத ஒரு அவசரகாலநிலை நாடெங்கிலும் நடைமுறைக்கு வந்துள்ளதுபோல் தெரிகிறது.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் பாதுகாப்புப் படையினர் எந்த நேரமும் உஷார் நிலையில் இருக்க வேண்டும் எனவும், பாதுகாப்பு நிலைகள் யாவும் பலப்படுத்தப்படவேண்டும் என்றும், ஜனாதிபதி படைத்தரப்பினருக்கு அறிவித்ததையடுத்து இந்தப் பிரகடனப்படுத்தப்படாத அவசரகால நிலைக்கான சமிக்ஞைகள் தென்பட ஆரம்பித்துள்ளது.

இராணுவத்தினருக்கு மேலதிகமாக பொலிஸ் அதிகாரங்களை ஜனாதிபதி கையளித்துள்ளமையானது நிலைமையை மேலும் மோசமாக்கும் ஒன்றாகவே, கருத இடமளித்துள்ளது.

இது ஒரு அநாவசியமான நடவடிக்கையாகும். இதன் மூலம் போர்க்கால சூழல் ஒன்று மீண்டும் இயல்பாகவே போர் நிறுத்த காலத்தில், சமாதான சூழலில் உருவாவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்போவது தவிர்க்கமுடியாததாகப் போகிறது.

நேற்று முன்தினம் கொழும்பில், இராணுவமும் பொலிஸாரும் இணைந்து நடாத்திய சுற்றிவளைப்பு -சோதனை - மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின்போது, சந்தேகத்தின் பேரில் 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று செய்தி வந்துள்ளது.

இது புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் செயலாகும்.

மூன்று அமைச்சுக்களை தன்வசம் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி, சமாதான நடவடிக்கைகள் தொடரும் எனவும், புரிந்துணர்வு உடன்பாடு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும், போர்நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படும் என்றும் உத்தரவாதம் அளித்தபோதிலும், பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பேரில் மீண்டும் படைத்தரப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதென்பது சமாதானம் நிலவும் இன்றைய சூழலில் போர்ச் சூழலை வலிந்து உருவாக்கி தனது நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க ஜனாதிபதி மறைமுகமாக தனது அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றார் என்ற எண்ணத்தையே அனைவர் மனத்திலும் உருவாக்குவதாக உள்ளது.

நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து என்று கூறியே, ஜனாதிபதி கடந்த சில நாட்களாக சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், அந்தளவுக்கு நாட்டில் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளானதற்கான ஆதாரங்கள் எதுவும் பெரிதாக இல்லை.

இந்த நிலையில், நாட்டு மக்களுக்கு சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்திற்கும், தனது நிறைவேற்று அதிகார வலுவை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதற்கான காரண முன்வைப்புக்களை நிரூபிக்க, நியாயப்படுத்தத் தேவையான ஆதாரங்களைத் தேடவேண்டிய அவசியம் இன்றைய நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தவிர்க்க முடியாத வகையில் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்காவில் இன்று நிலவும் அமைதி மற்றும் சமாதான நிலையானது, கடந்த இரு தசாப்தங்களில் என்றுமே நிலவாத ஒன்றாகும். இதனை சிறிலங்காவின் வரலாறறிந்த அனைவரும் உணர்வர்.

இன்றைய அரசியல் சூழலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தனது அரசியல் அபிலாஷைகளுக்கு ஏற்புடையதல்ல என உணர்ந்த அதிகார வலுமிக்க ஜனாதிபதி, தனது அதிகார பலத்தைப் பயன்படுத்தி மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் குறித்து சமாதான ஆர்வலர்களும், சர்வதேசமும் அதிருப்தி அடைந்துள்ள வேளையில், தனது செயலை நியாயப்படுத்த முனையும் ஜனாதிபதி, படைத்தரப்பினருக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் நாட்டின் சகல பகுதிகளிலும், குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிரானதும், அவர்களைப் பாதிக்கக் கூடியதும், அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் ஆனதுமான ஒரு சூழலை மறைமுகமாக உருவாக்க முனைகின்றார் என்றே அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சந்திரிகா தனது முன்னைய ஏழாண்டுகால ஆட்சியில் மேற்கொண்ட இந்த விதத்திலான நடவடிக்கைகள் ஏற்படுத்திய பாதிப்புகள், இழப்புகள், அதிர்ச்சி போன்றவற்றிலிருந்து நாடும், மக்களும் குறிப்பாக தமிழ் மக்களும் - இன்னமும் மீளாத நிலையில் மீண்டும் அப்படியானதோர் நிலையை உருவாக்க முயல்வதும், அதன் அடிப்படையில் தனது செயல்களுக்கு நியாயம் கற்பிக்க முயல்வதும் தனது அரசியல் அபிலாஷைகளை பாதுகாக்க நினைப்பதும் ஆபத்தானதும், இன்னும் மோசமானதுமான எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதையே உணராமல் தொடர்ந்தும் செயற்படுவது தான் வேதனை தரும் தொலை நோக்கு சிந்தனை அற்ற விடயம் ஆகும்.

அதிகாரத்தை அதிகாரமாக பயன்படுத்த முனைந்தால் அதிகார பீடத்தில் உள்ளோர்தான் அவமானங்களையும், அழிவுகளையும் எதிர்கொள்ள நேரிடும் என்று, வரலாற்றுப் பாடத்தை கடந்தகால அனுபவங்களை சந்திரிகா மறந்து செயற்படுவதானது சமாதானத்தை நிரந்தரமாகவே சாத்தியமற்ற விடயமாக்கிவிடும் என்பதே உண்மையாகும்.

## நாடும் நடப்பும்




# தமிழர்கள் விரும்புவது சமாதானத்தினையே; சர்வதேச சமூகம் அதை நன்குணர்ந்துள்ளது

## நல்லூர் கோட்டபொறுப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நாட்டில் நிலவும் அரசியல் குழப்பங்களால், சமாதான நடவடிக்கையில் பாதிப்பு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளபோதிலும், தமிழ்மக்கள் சமாதானத்தில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். இதன் அடிப்படையில்தான், இலங்கை அரசியல் தொடர்பாக இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பல வெளியிட்டுள்ள கருத்துக்கள் எமக்கு உணர்த்துகின்றன என, யாழ்.நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம், மாலை 5 மணியளவில் - திருநெல்வேலி வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில், தொடர்ந்து உரையாற்றிய ஈஸ்வரன் - சமாதானத்திற்காக தமிழ்மக்கள் அதிகமானவற்றை இழந்துள்ளார்கள், அதிகமானவற்றை விட்டுக்கொடுத்துள்ளார்கள். இதன் அடிப்படையில், சமாதானத்தையே விரும்பும் தமிழ் மக்கள் - அதில் அதிக அக்கறை கொண்டுள்ளனர். அந்த வகையில் இந்தியா, அமெரிக்கா, ஐ.நா. செயலாளர் உட்பட பலர் - சமாதானத்திற்குத் தீங்கு விளைவிக்கவேண்டாம் எனத் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்குக் கூறியுள்ளனர். தமிழர்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகள் இன்று தென்னிலங்கையில் தோல்வியடைந்துள்ளன.

ஒன்று - குரங்குபாஞ்சான் முகாம் நோக்கிய இனவாதிகள் படையெடுப்பும், அதன் தோல்வியும், அடுத்தது - கொழும்பில் கலைக்கூடல் நிகழ்வின் இனவாதிகளின் தாக்குதலும், அது வெளிப்படுத்திய கருத்துக்களும் தோல்வியும் - இன்று தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புவதை உலகுக்கு உணர்த்தியுள்ளது. அதன் வெளிப்பாடாகவே சர்வதேச சமூகம், இன்றைய இலங்கை அரசியல் பற்றிய கருத்துக்களாக வெளியிடுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (205)

# எழுவைதீவு, அனலைதீவு பகுதியில் காலைநேர தபால் சேவைகள்!

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவு, அனலைதீவு பிரதேசங்களில்,வெகுவிரைவில் காலைநேர தபால் விநியோகம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாலை நேரத்தில் இடம்பெறும் தபால் விநியோகத்தால், இங்கு கடமையாற்றும் அரச ஊழியர்கள், திணைக்களங்களால் அனுப்பிவைக்கப்படும் அவசரமான தகவல்கள் மற்றும் அறிவித்தல்களை உடன்பெறமுடியாமையால், பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகிவந்தனர்.

இந்தநிலையில், காலைநேர தபால் விநியோகம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதன்மூலம், இங்குள்ள அனைவரும் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பப்படுகிறது.

ஊர்காவற்துறை தபாலகத்திலிருந்து இங்குள்ள உபதபாலகங்களுக்கு தபால் தரம்பிரிக்கப்பட்டு, அனுப்பிவைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (83)

# 'கல்வியியலாளன்' நூல் வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அரச அறிவியல் ஒன்றியத்தின் ஆதரவுடன் 'கல்வியியலாளன்' நூல் - நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக அரச அறிவியற்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வரவேற்புரையை இ.அஜந்தாவும், வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும், வெளியீட்டுரையை யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதனும் நிகழ்த்தினர்.

ஆய்வாளர் கௌரவிப்பினை, யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் ம.சின்னத்தம்பி நிகழ்த்தினார். மதிப்பீட்டுரைகளை பேராசிரியர் பெ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கலாநிதி வி.நித்தியானந்தம் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை - யாழ். கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதனிடமிருந்து, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை உப அதிபர் சு.தியாகலிங்கம் பெற்றுக்கொண்டார்.(ப)

# மாதமொன்றுக்கு ஏழு லட்சம் லீற்றர் பெற்றோல் பயன்படுத்தப்படுகின்றது!

## யாழ்.பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாதம் ஒன்றிற்கு ஏழு லட்சம் லீற்றர் பெற்றோல் பயன்படுத்தப்படுவதாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்தியக் கிளையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஏ-9 பாதை திறப்பிற்கு முன்னர் இருந்த பெற்றோலியப் பொருட்களின் பாவனை, பாதை திறப்பிற்கு பின் பல மடங்காக அதிகரித்திருக்கின்றமை இந்தப் புள்ளி விபரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

ஏ-9 பாதைதிறப்பதற்கு முன்னர், மாதமொன்றிற்குச் சராசரியாக 3 லட்சம் லீற்றர் பெற்றோலும், 13 லட்சம் லீற்றர் சுப்பர் டீசலும், 16 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயும், 2 லட்சம் லீற்றர் ஓட்டோ டீசலும் - குடாநாட்டு மக்களின் பயன்பாட்டில் இருந்துவந்தது.

எனினும், ஏ-9 பாதை திறக்கப்பட்டமையைத் தொடர்ந்து, படிப்படியாக அதிகரித்துவந்த பெற்றோலியப் பொருட்களின் பாவனை, தற்போது சராசரியாக மாதமொன்றிற்கு - 7 லட்சம் லீற்றர் பெற்றோலும், 29 லட்சம் லீற்றர் டீசலும் (சுப்பர், ஓட்டோ டீசல்), 17 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பெற்றோலியப் பொருட்களின் பயன்பாடு அதிகரிப்பதற்கு- அண்மைக்காலங்களில் வாகனங்களின் பயன்பாடு அதிகரிப்பும், புதியபல தொழிற்சாலைகள் செயற்படத் தொடங்கியிருக்கின்றமையுமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வீடுகளில் மின்சார அடுப்புக்கள் பயன்பாடு அதிகரித்திருப்பதால், காஸ்குக்கர் பாவனை குறைந்துள்ளதாகவும் - இதனால், மண்ணெண்ணெயின் பயன்பாடு பெருமளவிற்கு அதிகதிக்கப்படவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ப)

# சந்திரிகா - ரணில் பலப்பரீட்சைக்கு பின்னணியில் இருப்பவர்கள் யார்?



வாசகர்களே! நடந்து முடிந்த வாரம் இலங்கை அரசியலில் பரபரப்பான வாரமாகும். இடைக்கால நிர்வாகசபை வரைபு சமர்ப்பிப்பு, ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா பயணம், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுப்பு, அவசரகாலச் சட்டம் பிறப்பிப்பு - பின் பிறப்பிக்கவில்லை என மறுப்பு, ரணில் நாடு திரும்பியமை, மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரண்டு வரவேற்பு என ஒரு நீண்ட குழப்பம் முடிவடைந்தது. அதனால், இவ்வாரத்தைக் குழப்பத்திற்கான பின்னணியையும், குழப்பம் ஸ்தம்பித்துப் போயுள்ளதையும் அவதானிப்போம்.

பெருமளவான அரசியல் விமர்சகர்களும், ஆய்வாளர்களும் நடந்து முடிந்த அரசியல் குழப்பத்தை அரசியலமைப்புக்கான குழப்பம் என்றும், அதிகாரப் போட்டியென்றும் குறிப்பிடுகின்றனர். அதில் ஓரளவு உண்மையிருந்தாலும், அடிப்படையில் அத்தகைய குழப்பம் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்குவந்த காலப்பகுதியிலிருந்தே நிகழ்ந்து வருகின்றது. அது ரணில் கூறுவது போல, பருவக்காற்று மழை போன்றதுதான். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள குழப்பம் மேற்கு - கிழக்கு முரண்பாட்டில் எழுந்த குழப்பத்தினால் விளைந்த மழையாகும். அதாவது, மேற்கு என்பது இங்கு மேற்கு நாடுகளைக் குறிக்கின்றது. அதிலும், மேற்கு என்பது இங்கு அமெரிக்க நட்புக்கலந்த நாடுகளைக் குறிப்பதாகும். கிழக்குநாடு என்பது, இங்கு இந்தியாவைக் குறிப்பதாகும். அதாவது அமெரிக்க - இந்திய முரணபாடே, ரணில் - சந்திரிகா முரண்பாடாகும். ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றதும், அங்கு இலங்கையின் பாதுகாப்புப் பற்றிப் பேசியதும், ஏதோ உடன்பாடு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது உண்மையே. ஆனால், அவற்றில் ரணிலுக்கு முழுமையான நம்பிக்கை இல்லையென்று கருதுமளவுக்கு, ரணில் அமெரிக்காவுக்கு சென்றதும், அங்கு பொருளாதாரம் பற்றிய தீவிர உரையாடலையும், அதேநேரம் பாதுகாப்புப் பற்றிய பேச்சுக்களை செய்ததன் மூலமும் யாரும் விளங்கிக்கொள்ளலாம். இதனை இந்திய ஆளுமவர்ககத்தினர் விளங்கிக் கொள்ளாமலில்லை. இந்தியத்தரப்பு ரணிலை தங்கள் சட்டைப் பைகளுக்குள் போடப் பலதடவை முயன்றாலும், ரணிலுக்கு நம்பிக்கை ஏற்படுவது போல் நடந்துகொள்ள முயன்றாலும், ரணில் நழுவிக்கொண்டே போகிறார். அதாவது, இந்தியா பக்கம் தான் இருப்பதுபோல் காட்டிக்கொண்டு, மேற்கின் விசுவாசியாக நடந்துகொள்கின்றார். இதனால், இலங்கை விடயத்தில் இந்தியா மௌனமான அதிரடி நடவடிக்கைகளை எடுக்க விரும்புகின்றது.

இந்தியாவின் நடவடிக்கைக்கு இன்னோர் வலுவான காரணமும் இல்லாமலில்லை. விடுதலைப் புலிகள் அண்மையில் முன்வைத்த இடைக்கால நிர்வாக வரைபுபற்றி, இலங்கையில் எழுந்த விமர்சனத்தை விட, இந்தியாவில் எழுந்த விமர்சனம் மிக அதிகம். குறிப்பாக 'இந்து' பத்திரிகையில் (**The Hindu**) முன்னாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஷிற் வெளிப்படுத்திய தகவலின்படி - இலங்கையின் இறைமையிலும், ஒருமைப்பாட்டிலும் மேற்கு நாடுகளைவிட இந்தியாவுக்கு அதிக கரிசனை உண்டு எனக் குறிப்பிட்டிருந்தார். அதாவது, இடைக்கால வரைபை மேற்குநாடுகள் வரவேற்று அறிக்கைவிடும் போது, இந்தியர்கள் வரவேற்காதது மட்டுமன்றி, மேற்கைவிட தமக்குள்ள கரிசனையையும் தெளிவாகக் காட்டியுள்ளனர்.



எனவே, ஜனாதிபதி சந்திரிகா ஏற்படுத்திய குழப்பம் அரசியலமைப்புக் குழப்பமெனமட்டும் கணக்குப் போடமுடியாது. அவர் திட்டமிட்டு வழிநடத்தப்பட்டுள்ளார். அது ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பல நன்மைகள் ஏற்படலாமென்ற எதிர்பார்ப்புடனே இந்தக் குழப்பம் உருவானது. நிச்சயமாக அதிகாரப் போட்டிதான், ஜனாதிபதி சந்திரிகாவின் இலக்காக மட்டும் இருந்திருந்தால், ஏற்கனவே பல வாய்ப்புக்களும், சந்தர்ப்பங்களும் அவரை நாடிவந்தது. அப்போதெல்லாம் மௌனமாக இருந்துவிட்டு, திடீரென தற்போது எழுச்சியடைந்தது ஏனென்று கேள்வி எழுப்புகின்றபோதே, அதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது.



ஒன்று - இடைக்கால வரைபினால் ஜனாதிபதி ஆட்டங்கண்டுவிட்டார். அது இந்தியாவுக்கும் அதனது உள்நோக்கங்கள் அடிப்படையில் அபாயமானதாகக் கருதியதும் வாய்ப்பு அதிகரித்தது. இதனால் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களை திட்டமிட்டே அவர் கைப்பற்றினார். அதனூடாக, நாட்டின் பாதுகாப்பைப் பேணுவதுடன், வடக்கு-கிழக்கில் காணப்படும் நோர்வேயின் பிரசன்னத்துடனான கண்காணிப்புக் குழுவையும், வடக்கு - கிழக்கில் காணப்படும் இராணுவம், பொலிஸ் பிரிவையும் கையாளலாம் என்பதுடன், அதற்கான பிரகடனங்களை வெளிக்கொண்டுவரும் நோக்கில், தொடர்பாடல் அமைச்சையும் ஜனாதிபதி கைப்பற்றியிருந்தார். இவற்றின்மூலம், சமாதான முயற்சியை சீர்குலைக்கலாம் என்பதே, ஜனாதிபதியின் நோக்கமாக அமைந்திருந்தது. அவ்வாறாயின், ஜனாதிபதி ஏன் விடுதலைப் புலிகளுடன் தான் தொடர்ந்து பேசவிரும்புவதாகக் கூறுகின்றார் என்ற கேள்வி எழலாம். அக்கேள்வி நியாயமானதுதான். சாதாரணமாகப் பார்த்தால் நியாயமாக மட்டுமே தெரியும். சற்று ஆழமாகப் பார்த்தால் ஏமாற்றுத்தனமான அணுகுமுறையாக அமையும். ஜனாதிபதி சமாதானமான அரசியல் கலாசாரத்துக்குள் வந்திருப்பாராயின், ரணிலின் முயற்சியை ஊக்குவிப்பதுடன், இத்தகைய போக்கை அனுசரித்துச் செயற்பட்டிருப்பார். இவ்வாறானதோர் குழப்பத்தை தோற்றுவித்திருக்கமாட்டார். இதுவரை நடந்த சமாதான முயற்சியை அரைகுறையில் தடுத்து நிறுத்திவிட்டு, மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்க ஜனாதிபதி திட்டமிடுகிறார். அதாவது, 1957 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஆட்சியிலிருப்பவர்கள் தொடக்கத்தை உருவாக்க, எதிர்க்கட்சியினர் தொடக்கப் புள்ளியை அழித்துவிடுவது வழமையாகிவிட்டது. இதன் ஒன்றாகவே, தற்போதைய நடவடிக்கையையும் ஜனாதிபதி கையாள விரும்புகின்றார்.

இன்னோர் விடயம்- இத்தகைய நடவடிக்கைகளூடாக ஜனாதிபதி தனது நிறைவேற்று தன்மையையும், பாதுகாப்பையும் தக்கவைக்க முயன்றுள்ளார் என்பதாகும். அதாவது, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தற்போது ஆலோசித்து வரும் ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, ஜனாதிபதி முன்கூட்டியே தடுக்க விளைந்துள்ளார். அதனை பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றம் கொண்டுவரவிருந்த குற்ற விசாரணை மீதான பிரேரணையை, நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததனூடாக தடுத்துள்ளார். ஏனெனில், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறினால், அடுத்து நீதித்துறையின் பங்கு மிக முக்கியமானதாகும். அதாவது, உயா நீதிமன்றத்தில் குற்றப் பிரேரணைக்கு ஒப்புதல் பெறுதல்வேண்டும். இதனால், ஜனாதிபதி பிரதம நீதியரசரை பாதுகாப்பதன் வாயிலாகத் தன்னையும் பாதுகாக்கத் திட்டமிட்டுவிட்டார்.

இத்தகைய அரசியல் குழப்பம் தற்போது ஸ்தம்பித்துப் போயுள்ளது. அதனை எப்படி ரணில் விக்கிரமசிங்க கையாண்டார் என்பதை சற்று விரிவாக நோக்குவோம்.

மிகப் பிரதான பலம்- ரணில் அரசுக்கு சர்வதேச நாடுகளின் உதவியாகும். அதிலும், குறிப்பாக அமெரிக்காவின் உதவி அளப்பரியது. அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய ஜனாதிபதி, பிரதமர் விமான நிலையத்தில் தரையிறங்கிய மறுகணமே, அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவில்லை என்ற செய்தி, ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து வெளியானது. இதனைப் பார்த்தால் நிறைவேற்று அதிகாரம் இதுதானா? என்ற கேலிக் கேள்வியல்லவா ஏற்படும். அமெரிக்கா-ரணில் நெருக்கமும், அரசியல் குழப்பம் சாத்தியமானதும், உல்லாசப் பயணிகளது வருகை ஸ்தம்பித்துப் போனமையும், இங்கிலாந்து-இலங்கை கிரிக்கெட் போட்டி கைவிடப்பட்டதாக, இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சு அறிவித்தமையும், ஜனாதிபதியின் அவசரகாலப் பிரகடனம் கைவிடப்பட்டமைக்கு முக்கிய காரணமாகும். பிரதமரும், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் சேர்ந்து, ஊடகவியலாளர்களுக்குக் கொடுத்த மிகநெருக்கமான காட்சிப் படங்கள் (**Body link politic**) உலகத்துக்கு மட்டுமல்ல, சந்திரிகாவையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கும். அதுமட்டுமல்ல, வெள்ளை மாளிகை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு பூரணமான ஆதரவை அமெரிக்கா கொடுக்குமெனத் தெளிவாக அறிவித்தது. இதன் பின்னர், ஜனாதிபதி சந்திரிகாவின் அணுகுமுறை தளம்பலடைய ஆரம்பித்தது எனக் கூறலாம்.

ரணில் விக்கிரமசிங்கவை தவறாகக் கணக்குப் போட்டவர்களுக்கு, தெளிவான விளக்கத்தை அண்மைய சம்பவம் எடுத்துக்காட்டியிருக்கும். இலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்பட்டபோதும், ரணில் அமெரிக்கப் பயணத்தை இடைநடுவில் கைவிட்டு விட்டுக் கிளம்பவில்லை. அதுமட்டுமல்ல, பெரும் குழப்பங்களையும், அதிர்ச்சியையும் ரணில் அடையவில்லை. மிக நிதானமாக தனது நடவடிக்கையைக் கையாண்டதுடன், அமெரிக்காவிலிருந்தே இங்கு வழிகாட்டியுமிருந்தார் என்பதைக் கவனத்தில் கொள்ளும்போது, ரணிலை சிரத்தையுடன் அணுகுவதே பொருத்தமானதெனத் தெரிகின்றது.



ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் குழப்பம் ரணிலின் கையை ஓங்கவைத்துள்ளதென்றாலும், சந்திரிகாவின் பிடி முற்றாகத் தளர்ந்ததென்று கூறிவிடமுடியாது. பாதுகாப்பு அமைச்சு என்ற பிரச்சினையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் வாயிலாக, ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தைக் காட்ட முயலலாம்.

தனது விருப்பப்படி நோர்வேயையோ அல்லது பேச்சுவார்த்தைக் களத்தையோ, ஜனாதிபதி பயன்படுத்தத் திட்டமிடலாம். அதற்கு ரணில் அரசு இசைந்து கொடுக்குமாயின், ஜனாதிபதி திருப்திப்படுவதுடன், விடுதலைப் புலிகளிடமிருந்து, ரணிலின் அரசுக்கு ஏற்படும் நெருக்கடிகயையும், ரணில் கையாண்டு கொண்டு ஆட்சியை அலங்கரிப்பவராக, விளங்குவார். அதாவது, எப்படிப் புரிந்துணர்வு உடன்டிக்கையை முழுமையாக அமுல்படுத்தாது காலத்தை கடத்திக்கொண்டு ரணிலின் அரசு செயற்படுகின்றதோ, அதேபோன்று புலிகள் முன்வைத்த இடைக்கால வரைபையும், சமாதான முயற்சியையும், பாதுகாப்பு அமைச்சு தனது அரசிடம் இல்லையென்று கூறிக்கொண்டு, முழுமைாக அமுல்படுத்தாது காலத்தைக் கடத்தலாம். அந்த வகையிலேயே ரணில் நாடு திரும்பியதும், அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியுடன் ஒத்துழைப்பது பற்றியும், அது அவசியமான தென்பதையும் வலியுறுத்தியிருந்தார். இவ்வாறு ஒத்துழைப்பதெனக் கூறிவிட்டு, திடீரென முறிவை ஏற்படுத்தும் அணுகுமுறையை அல்லது சிக்கலை உருவாக்கும் சம்பவத்தின்போது, ஜனாதிபதி மீது முழுப் பொறுப்பையும் வழங்க ரணில் முயற்சி எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், அதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு என்ற நிலை, ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்திருக்கும் கட்சிகளால் ஏற்படும் நெருக்கடியையும், அச்சுறுத்தலையும் பொறுத்ததாகவே அமையும்.



எனவே, இரு தலைமையும் குதித்துள்ள பலப்பரீட்சையில், சர்வதேச நாடுகளின் ஆதரவு யார் பக்கமுள்ளதோ அவரது கை ஓங்கும் என்பதை கடந்த அனுபவத்திலிருந்து விளங்கிக்கொள்ளலாம். ஜனாதிபதிக்கு இந்தியாவின் ஆதரவு இருந்தபோதும், இலங்கை மக்களின் ஆதரவு ரணில் அரசுக்கே அதிகம் உண்டென்பதும், விமான நிலையத்தின் காட்சிகள் தெளிவுபடுத்துகின்றன.

**கே.ரீ.கணேசலிங்கம்**

மக்கள் திரண்டு ரணில் அரசுக்கு ஆதரவு தெரிவித்தமை அடுத்த தேர்தலுக்கான கதவுகளை பொது ஜன ஐக்கிய முன்னணி இறுக்கி மூடுவதற்குப் போதுமானதாகும். எனவே, எந்தப் பக்கம் ஒத்துழைப்பும், ஆதரவும் இருக்கின்றதோ அந்தப் பக்கம் பலப்பரீட்சையில் வெற்றி பெறும். இவ்வெற்றி நிரந்தர சமாதானத்துக்கும், தமிழர்களின் சுய பாதுகாப்புடைய வாழ்வுக்கும் வழிவிடுமா என்பதே அடுத்த கேள்வியாகும்.

# சவூதியின் தலைநகர் ரியாத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## 11 பேர் பலி! 100 இற்கு மேற்பட்டோர் படுகாயம்!!

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதியான - 200 வீடுகளைக் கொண்ட 'முகயா' என்ற குடியிருப்புத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற மிகமோசமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றில், 11 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். சுமார் 100 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

எகிப்து, சிரியா, லெபனான், ஜோர்தான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மத்தியதர வர்க்கத் தொழிலாளர்களே இந்தக் குடியிருப்புத் தொகுதியில் வசித்துவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெடிமருந்து நிரப்பிய வண்டி ஒன்றைச் செலுத்திவந்த தற்கொலையாளிகள், குடியிருப்புத் தொகுதிக்கு பாதுகாப்பு வழங்கிய இருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு கட்டடத் தொகுதியை மோதித் தகர்த்ததாக அறிவிக்கப்படுகிறது.

அல் - கொய்டா அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், இதில் அப்பாவிப் பொதுமக்களே கொல்லப்பட்டதாகவும் சவூதி அரேபியாவின் பாதுகாப்பு அதிகாரிகள் ரொய்ட்டருக்குத் தெரிவித்தனர்.

சவூதி அரேபியாவில் பிறந்த ஒஸாமா பின்லேடன், அங்கு மன்னர் ஆட்சியில் உள்ளவர்கள், மேற்கு நாடுகளை - குறிப்பாக அமெரிக்காவைச் சார்ந்திருப்பதை எதிர்த்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.





சவுதியில் தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான குடியிருப்புத் தொகுதி தகர்ந்துபோய்க் கிடப்பதைப் படத்தில் காணலாம்

# 3 லட்சம் மக்களின் சடலங்கள்; ஈராக்கில் புதைக்கப்பட்டுள்ளன!



ஈராக்கில் 260 இற்கு மேற்பட்ட புதைகுழிகளில் சுமார் 3 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் புதைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஈராக்கில் புதைகுழிகளைத் தேடுவதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியான சந்திரா கொட்கின்சன் இதுபற்றிக் கூறுகையில்,

இதுவரை 40 புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1997 ஆம் ஆண்டுவரையான சதாம் ஹுசைனின் ஆட்சிக் காலத்தில் குர்திஷ, ஸியா இனங்களைச் சேர்ந்த முஸ்லிம்களே கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர்.பல புதைகுழிகளில் காணப்பட்ட பெண்கள், சிறுவர்களுடைய மண்டை ஓடுகளில் குண்டுகள் துளைத்த துவாரங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

## உலக நோக்கு

# ஐ.நா. அலுவலகம் மீது கொங்கோவில் தாக்குதல்!

கொங்கோவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பூனியா என்ற இடத்தில் அமைந்துள்ள ஐ.நா. சபை அலுவலகம் மற்றும் இராணுவ முகாம் என்பவற்றின் மீது போராளிக் குழு ஒன்று தாக்குதல் நடத்தியதில் காவல் கடமையில் இருந்த இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில், கேமா, லெண்டு ஆகிய இரு போராளிக் குழுக்களிடையே நடைபெற்றுவரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஐ.நா. சமாதானப் படை அழைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை - அண்மையில், ருவாண்டாவின் எல்லைப் பகுதியில் இப்போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்களைக் கடத்திவந்ததாகச் சந்தேகிக்கப்படும் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியுள்ளது.



இது தொடர்பான விசாரணைகளை நடத்த ஐ.நா. அதிகாரிகள் முற்பட்டவேளை அவர்கள் தடுத்துநிறுத்தப்பட்டுள்ளனர்.

இதன் எதிரொலியாகவே ஐ.நா. தலைமையகமும் இராணுவ முகாமும் தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராளிக் குழுக்களுக்கிடையிலான மோதலை நிறுத்துவதற்கு, 4000 இற்கு மேற்பட்ட ஐ.நா சமாதானப் படையினர் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இருந்து கொங்கோவில் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த இரு போராளிக் குழுக்களுக்கிடையிலான மோதல்களால் கொங்கோவில் கடந்த 2 ஆண்டில் மட்டும் சுமார் 50,000 இற்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ட்ரக் - பஸ் விபத்தில் ஈரானில் 37 பேர் பலி!

(தெஹ்ரான்)

ஈரானில் - அதிவேக நெடுஞ்சாலை ஒன்றில் பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்றும் ட்ரக் ஒன்றும் மோதிக்கொண்டதில், 37 பேர் பலியாகினர். 10 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து - ஈரானில் போக்குவரத்து வேகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

# ஊர்சுற்றி எழுதுவது

மற்றவர்கள் சாதாரணமாகச் செய்ய முடியாத காரியங்கள் என்று கருதிச் சிலவற்றை அதிரடியாகச் செய்து பிறரின் கவனத்தைக் கவரச் செய்வதில் சில பெண்களுக்குத் தனி ஆசை.

ஆடைகளைத் தெரிவுசெய்து அணிவது, அதற்கேற்ப நகைகளை அணிந்து கொள்வது, அலங்கரித்துக்கொள்வது, ஆட்களுடன் பேசுவது எல்லாமே மற்றவர்களை விட வித்தியாசமாக இருக்க வேண்டுமென்றே சில பெண்கள் கவனித்துக்கொள்வார்கள்.

எங்கள் நாட்டுக்கு அருகே இந்தியாவின் தெற்குக் கரையில் தமிழ்நாடு என்ற பெயரில் ஒரு மாநிலம் இருக்கிறது. தமிழ்நாடு என்றுதான் பெயரேயொழிய அங்கே தாய்மொழிக்கு அதிக மதிப்புக் கொடுப்பதாகக்காணோம். போதனா மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததும் இந்தத் தமிழ் நாட்டில்தான்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக செல்வி. ஜெயராம் ஜெயலலிதா இருந்து வருகிறார். சந்தியா என்ற நடிகை பெற்றெடுத்த புத்திரி ஜெயலலிதா எம். ஜி. ஆர் என்ற மூன்றெழுத்து திரையில் புரட்சிசெய்து, புரட்சி நடிகராகிய பின், தமிழகத்தில் முன்னணி நட்சத்திரமாகி அரசியலில் நுழைந்து தமிழ்நாட்டின் புரட்சித் தலைவராகி, தமிழ் நாட்டின் முதல்வராகி சாதனைகள் செய்து சரித்திரம் படைத்தார்.

புரட்சித்தலைவர் சினிமாவில் ஜெயலலிதாவை நட்சத்திரமாக ஜொலிக்கச் செய்தார். தொடர்ந்து தமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரசாரத்திற்கு பயன் படுத்தினார். எம். ஜி. ஆரின் மறைவுக்குப்பின் அ. தி. மு. கழகத்தில் இடத்தைப் பிடித்த ஜெயலலிதா, தமிழ்நாட்டின் முதல்வராகி புரட்சித்தலைவியுமாகக் காட்சியளிக்கிறார்.

அ. தி. மு. கழகத்தில் ஜெயலலிதாவை தலைவியென்று சொல்வதைவிட சர்வாதிகாரியென்றே கழகத்தவர் தற்பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்கள். அவர் பேச்சுக்கு மறுபேச்சுப்பேச அங்கே ஆளில்லை.

ஜெயலலிதாவுக்கு அவரது கழகத்தொண்டர்கள் வைத்துப் போற்றாத அடைமொழிகளே இல்லை. அவரை 'அருட்பெரும் சோதியே' என்று கூட சுவரொட்டிகளில் பொறித்துப் பெருமைப்பட்டுக்கொண்டார்கள்.

திடீரென்று தனது அமைச்சரவையில் மாறுதல்கள் செய்வதில் ஜெயலலிதாவுக்கு நிகர் ஜெயலலிதாதான். அமைச்சராகப் பதவியேற்றதும், அந்த அமைச்சர் அம்மாவின் கால்களில் அஷ்டாங்கமாக விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு செல்வார். எல்லா அமைச்சர்களும் இப்படித்தான் ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு செல்வார்கள். அமரர் நெடுஞ்செழியன் மட்டும் காலில் விழவில்லை.

காலில் விழுந்து ஆசீ வாங்கிச் சென்ற அமைச்சர் அம்மாவைப் பற்றி எப்போதோ எங்கேயோ தவறாக மரியாதைக் குறைவாக பேசியதாக அம்மாவின் காதில் யாராவது போட்டுவிட்டால், அந்த அமைச்சர் முக்கியமானதொரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில்கூட அவர் அமைச்சர் பதவியிலிருந்து இறக்கப்பட்டு விட்டதாக அறிவிப்பு வெளியாகும்.

இதைவைத்துத்துத்தான் சமீபத்தில் - ஒரு அமைச்சர், தான் அமைச்சராகப் பதவியேற்று ஐம்பது நாட்களாகி விட்டன. இதுவரை பதவியில் நீடித்திருப்பது குறித்துதாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்திருந்தார்.

அமைச்சர்களாக பதவியேற்கும்போதே எந்தச் சமயம் பதவி பறிபோகுமோ என்ற அவநம்பிக்கையுடன்தான் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்கள்.

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவுக்கும், இலங்கை அதிபர் சந்திரிகாவுக்கும் நெருங்கிய நட்பு இருக்கிறது. பல விசயங்களில் பொருத்தமும் இருக்கிறது.

ஜெயலலிதா ஒரு சினிமா நடிகையின் மகள். பிரபல சினிமா நடிகரைக் குருவாகக் கொண்டிருந்தவர். சினிமாவில் நடித்துப் பெயரும் புகழும் பெற்றவர். சினிமாவில் பொறாமைக்குரியவராக இருந்தவர். அரசியலில் பகைமைக்குரியவராக இருப்பவர். தான் நினைப்பதும், செய்வதும் சரியானதே, எவரும் தட்டிக்கேட்கக்கூடாதென்ற பிடிவாதமுள்ளவர். அரசியலில் எந்தக் கொம்பனாக, கிழவனாக இருந்தாலும் அவன் தனக்கு ஒரு தூசி என்று தான் கருதுபவர். பழிக்குப் பழி வாங்குவதில் சினிமாக் கதாநாயகிகளுக்கும் மேலானவர். ஜெயலலிதா இன்னமும் கலியாணம் செய்யவில்லை. இனித்திருமணம் செய்யும் வாய்ப்பும் இல்லை.

சந்திரிகா அம்மையார் சிறந்ததொரு நடிகரைத் திருமணம் செய்தவர். இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். கணவரும் அரசியல் பிரவேசம் செய்து, இனமத பேதமற்ற ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று கனவு கண்டவர். விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பியவர். சிங்கள பயங்கரவாத இயக்கமான மக்கள் விடுதலை முன்னணியின் துப்பாக்கிக்குண்டுக்கு தனது கணவரைப் பறிகொடுத்தவர் சந்திரிகா. இப்பொழுது ஆட்சியதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்கு மக்கள் முன்னணியுடன் உறவு வைத்துக் கொள்ளவும் தயாராக இருக்கிறார். அதிகாரத்தை யாருக்கும் கொடுக்கத் தயாரில்லை. ஆனால், அமைச்சர்கள் மூவரின் அதிகாரங்களை பிரதமர் நாட்டில் இல்லாதபோது, அதிரடியாக எடுத்துக்கொண்டார். தான் நினைப்பதும் செய்வதும் சரியென்பதே அவரது முடிவு. யாரும் தட்டிக் கேட்கக்கூடாதென்பது அவரது கொள்கை.

பிடிவாதத்திலும், புலியென்றால் கிலி கொள்வதிலும் ஜெயலலிதாவுக்கும், சந்திரிகாவுக்கும் வேறுபாடு இல்லை.

ஜெயலலிதாவைப் பின்பற்றித்தான் சந்திரிகாவும் மூன்று அமைச்சர்களின் பதவிகளை பறித்தாரோ?

புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர் மந்திரியாக இருந்தபோது கேலிச்சித்திரம் ஒன்றை வெளியிட்டதற்காக புகழ்பெற்ற ஆனந்தவிகடன் சஞ்சிகையின் ஆசிரியருக்கு தமிழ் நாடு சட்டசபையில் விசாரணை நடத்தி, இருவார கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சட்ட சபையின் இந்த நடவடிக்கையை தமிழ்நாட்டில் மட்டுமல்ல. இந்தியாவிலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலிருந்தும் பத்திரிகையாளர்களும் அரசியல் தலைவர்களும் கண்டித்தனர். எதிர்ப்புக் கிளம்பியது.

எம். ஜி. ஆர் விகடன் ஆசிரியருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை ரத்துச் செய்தார்.

இப்பொழுது இந்தியாவின் புகழ்பூத்த இந்து நாளிதழின் ஆசிரியருக்கும், நான்கு செய்தியாளர்களுக்கும் தமிழ் நாடு சட்டசபை இருவார கால சாதாரண சிறைத்தண்டனை விதித்திருக்கின்றது. தமிழக சட்டசபை உறுப்பினருக்கும் சட்டசபை சிறைத்தண்டனை விதித்திருக்கிறது.

இந்த நடவடிக்கைக்கு இந்தியா முழுவதிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

ஆனால், ஜெயலலிதா அசைவதாகக்காணோம்.

இங்கு சந்திரிகாவின் நடவடிக்கையால் நாட்டின் பொருளாதாரமே ஆட்டம் காணும் நிலையிலிருப்பதால் அம்மையார் தமது கடும் போக்கில் கொஞ்சம் நழுவலைக் காட்டுவதாகத் தோன்றுகிறது.

பெண்களே புரியாத புதிர்கள் என்று சொன்னது எக்காலத்திற்கும் பொருந்தும் இங்கேயும் பொருந்தும் என்கிறார் நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தற்போதைய அரசியல் குழப்பநிலையை தணித்து பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படல் வேண்டும்

## ஐரோப்பிய யூனியனின் வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்ப சூழலைத்தணித்து உரிய ஏற்பாட்டாளர்களது அனுசரணையுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடரவேண்டுமென, ஐரோப்பிய யூனியன் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வில்டன் வோவ்ரெர்ச் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 'போர்நிறுத்தம் 2001 சமகாலத்திற்கான படிப்பினை' என்ற நூல் அறிமுக விழாவில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதை, பல நாடுகள் விரும்புகின்றன. இந்த நிலையில் இத்தகைய குழப்பநிலைகள் ஏற்படுவது மனவேதனைக்குரிய ஒன்றாகும்.

உரிய அனுசரணையாளர்களுடன் தொடர்புகொண்டு சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

தொடர்ந்தும் இத்தகைய குழப்பநிலை இடம்பெறுவது நாட்டுக்கே ஆபத்தானதாக அமைந்துவிடும். இலங்கைக்கு சகல உதவிகளையும் வழங்க ஐரோப்பிய யூனியன் தயாராகவுள்ளது என ம் அவர் தெரிவித்தார். (202)

## நாற்சந்தி

கடந்த சில தினங்களாக குடாநாட்டில் இரவு வேளைகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறையத் தொடங்கியுள்ளது.

தொடர்மழை இதற்கு ஒரு காரணமென்று கூறினாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம்தான் பிரதான காரணமாகும்.

ஏற்கனவே - தேக்கநிலையினை அடைந்துள்ள சமாதான முயற்சிகள் முற்றிலும் முறிந்து, மீண்டும் பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கால துயரங்கள் - பங்கங்கள் ஏற்பட்டுவிடுமோவென மக்கள் மனதில் ஒருவித பயம் இயல்பாகவே ஏற்பட்டுவிட்டது.

ஜனாதிபதி - பிரதமர் ஆகியோருக்கிடையேயான அரசியல் யுத்தம் மீண்டும் சமாதானத்திற்கான போரை ஆரம்பிக்கக் காரணமாகிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

ஜனாதிபதி எவ்வளவுதான் சமாதானம் பற்றிக்கூறினாலும், போர்நிறுத்தம் தொடருமென உறுதிப்படுத்தினாலும், படைத்தரப்பினர்க்கு அவர் வழங்கும் அதிகாரங்களும், உத்தரவாதங்களும் மக்களுக்கு எல்லா வகையிலும் அச்சத்தையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தி வருகிறது என்பதுதான்- இன்றைய யதார்த்தமாகும்.

ஆரை ஆர் கண்டாலும் 'என்ன நடக்கப்போகுது.... சண்டை வருமோ.... பழையபடி வீட்டைவிட்டு ஓடவேண்டுமோ....' என்று கேட்கிறார்கள், கதைக்கிறார்கள். அந்தளவுக்கு நிரந்தர சமாதானம் - அமைதி குறித்த சந்தேகங்கள் அதிகரித்துவிட்டன.

'வீட்டைவிட்டு வெளிக்கிடேக்கை கவனமாய்ப் போங்கோ, அங்கினை இங்கினை கதைச்சுக்கொண்டு நிக்காமை கெதியா வாங்கோ.... அடையாள அட்டை கொண்டு போறீங்களோ....' என்று முந்தியப் போலே மனிசி புலம்பத் தொடங்கிட்டு என்கிறார் ஓய்வுபெற்ற வாத்தியார்.

தெருவாசி

# சிங்கள மக்களின் பாதுகாப்பு அமைப்பு வவுனியா நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி!

வடக்கு,கிழக்கு சிங்கள மக்களின் பாதுகாப்பு அமைப்பொன்று நேற்று வவுனியாவில் பேரணியொன்றினை நடாத்தியுள்ளது.

பௌத்த மதத்திலுள்ளவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதனை எதிர்த்தும், சகல இன மக்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் எனவும் கோரியே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தப்பட்டது. நேற்று மாலை 3.30 மணிக்கு வவுனியா 2ம் குறுக்குத் தெருவில் ஆரம்பமான இந்தப் பேரணி, வவுனியா அரச செயலகத்தை சென்றடைந்து அங்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் வவுனியா மாவட்டபதில் அரச அதிபர் ரகுநாதபிள்ளையிடம் கையளித்தனர்.

# காணாமல் போன சிப்பாய் சடலமாக மீட்கப்பட்டார்

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காணாமல்போன இலங்கை இராணுவ சிப்பாய் ஒருவர், நேற்று மாலை கத்திக்குத்துக் காயங்களுடன் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறும்புமலை இராணுவ முகாமில் பணியாற்றும் தர்மதாச என்ற சிப்பாயே இவ்வாறு கொலைசெய்யப்பட்டவராவார்.

இவரது சடலம் கிண்ணியா வீதியில் மக்கள் நடமாட்டமற்ற பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைக்கான காரணம் எதுவெனத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - வவுனியாவில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, விபத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிறிலங்காவின் 56 ஆவது பிரிகேட் படைப்பிரிவைச்சேர்ந்த சந்திரபால என்ற சிப்பாயே உயிரிழந்தவராவர்.

நேற்று அதிகாலை வவுனியா ஓமந்தை படைப்பயிற்சி முகாமில், பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே, இந்தச் சிப்பாய் மரணமானாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

# பொலிஸ் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு!

பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கான உயர்மட்டச் சந்திப்பொன்று இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பிற்கு நாட்டில் சகல பகுதிகளில் இருந்தும் பொலிஸ் உயர் அதிகாரிகள் ஜனாதிபதியால் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

உட்துறை அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் அதன் கீழ் இயங்கும் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளை சந்திப்பதற்கான முதலாவது கூட்டம் இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## மிதிவெடியகற்ற...

அப்பகுதிக்கு வந்த 33 பேர் அடங்கிய மிதிவெடி அகற்றும் குழுவினரை, படையினர் அப்பகுதியில் மிதிவெடி அகற்றவேண்டாம் எனவும், அவர்களை திரும்பிச் செல்லுமாறும் கூறி அனுப்பிவிட்டனர்.

இதனை அறிந்த அப்பகுதி மக்கள் கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன் திரண்டு, படையினரின் இச்செயலை கண்டித்து கோஷங்களை எழுப்பியுள்ளார்கள்.

இது தொடர்பாகப் பேசவுள்ளதால், எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மக்களை அருகிலுள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு வருமாறு அழைத்த படையினர், அங்கு மக்களுக்கு பழுதடைந்த அரிசியை வழங்கியுள்ளனர்.

இதனால் ஆத்திரமுற்ற மக்கள் அரிசி வேண்டாம் படையினரை வெளியேறுமாறு ஆக்ரோஷமாக கோஷம் எழுப்பியுள்ளனர்.

இதனை அடுத்து இராணுவத்தினர் அங்கிருந்து திரும்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.(ப-9)

# நான் அமைச்சுப் பதவிகளைப் பறிக்கவில்லை சில அதிகாரங்களையே மீளப்பெற்றுள்ளேன்!

## ஜனாதிபதி பி.பி.ஸிக்குப் பேட்டி

(கொழும்பு)

நான் மூன்று அமைச்சுப் பதவிகளைப் பறிக்கவில்லை. அந்த அமைச்சுக்களிடமிருந்து சில முக்கிய துறைகளைத்தான் திரும்ப பெற்றுள்ளேன்.

இவ்வாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்தை விரும்புகின்றார்கள்தான். ஆனால், அந்த சமாதானத்துடன் தமிழீழத்தையும் பெற்றுவிடவேண்டுமென எண்ணுகின்றார்கள்.

இதனைத் தடுக்கவே தொடர்பாடல், பாதுகாப்பு, உள்துறை முதலான மூன்று அமைச்சுக்களின் சில முக்கிய துறைகளை திரும்பப் பெற்றுள்ளேன்.

அமைச்சரவைக் கூட்டங்களின் போது என்னை மிக மோசமாக நடத்தியுள்ளார்கள். என்னை இழிவுபடுத்தும் வகையில் அவர்கள் நடந்துகொண்டமை பற்றி விபரித்துக்கொண்டே போகலாம்.

இதனைவிட தொலைக்காட்சி நிகழ்வுகளில்கூட நான் மிகவும் கீழ்த்தரமாக விமர்சிக்கப்பட்டேன். நீலப்படங்கள் காண்பிக்கும் தொலைக்காட்சி நிறுவனங்களைத் தவிர மற்றைய எல்லாத் தொலைக்காட்சி நிறுவனங்களும், ஒரு பெண் என்று கூட பாராமல், எந்த ஒரு பெண்ணையும் இழிவுபடுத்தாத வகையில் என்னை மிக மோசமாக இழிவுபடுத்தியுள்ளார்கள்.

அரசாங்கத் தொலைக்காட்சி நிறுவனங்களும், பிரதமரின் உறவினர்களின் தொலைக்காட்சி நிறுவனங்களும் இதில் முன்னின்று செயற்பட்டன.

பிரதமரால் முன்மொழியப்பட்ட பாதுகாப்பு அதிகார விடயங்களை தற்காலிகமாகவே அவரிடம் வழங்கியிருந்தேன். அதுவும் தயக்கத்துடனேயே வழங்கியிருந்தேன்.

கடந்த வருடம் பிரதமர் விடுதலைப்புலிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் செலலுபடியற்றது ஏனெனில் அதில் நான் கையெழுத்திடவில்லை.

விடுதலைப்புலிகளையோ, அவர்களின் தலைவரையோ நான் ஒருபோதும் நம்பத் தயாராக இல்லை. ஆனால், தமிழ் மக்களின் நலனுக்காக அவர்களுடன் பேசவும், ஒத்துச் செயற்படவும், தயாராக உள்ளேன் எனத் தெரிவித்தார்.

## ஐந்து மாவீரரின் நினைவுக்கல் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

வெவ்வேறு மோதல் சம்பவங்களில் உயிர்நீத்த ஐந்து மாவீரர்களது நினைவுத் தூபிகள் இன்று உடுப்பிட்டி எள்ளன்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

வீரவேங்கை கபிதன் (கதிரவேலு ரவிக்குமார், அந்தணத்திடல், கரவெட்டி)

கப்டன் முத்துக்குமார் அல்லது ஸ்ரீபன் (சண்முகம் ஞானச்சந்திரன் கரவெட்டி கிழக்கு)

லெப்டினன் தளிர் அல்லது பரிமளா (மார்க்கண்டு குமுதினி கரவெட்டி கிழக்கு)

கடற்புலி மேஜர் நிலவன் (சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி, ஆலடி வல்வெட்டித்துறை)

லெப்டினன் சபேசன் (குணபாலசிங்கம் தர்மேஸ்வரன் நவிண்டில்)

ஆகிய மாவீரர்களின் நினைவுத் தூபிகளே உரிய இராணுவ மரியாதையுடன்,

இன்று திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பௌத்த...

இதேவேளை - பிரதமரின் செயற்பாடுகள் குறித்தும், ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்தும் சரியான தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையிலிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## ஜனாதிபதியின்...

கப்பலை சோதனையிடுமாறு தான் கடற்படையினருக்கு உத்தரவிட்டதாகவும் தெரிவித்த அவர் -

ஜனாதிபதி திருகோணமலை குரங்குபாஞ்சான் முகாம் விடயத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்ததாகத் தெரிவிப்பது தவறு. 1995 ஆம் ஆண்டு கிழக்குப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் எடுக்கப்பட்டு யாழ். குடாநாட்டை கைப்பற்றியிருந்தார்கள். இவ்வேளை புலிகள் இப்பகுதியில் நிலைகொண்டுவிட்டனர்.

அத்தோடு விமானப்படையினரையும், நாம் நவீனமயப்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்தோம் என்று மேலும் தெரிவித்தார்.

# சிரேஷ்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் 30 பேருக்கு இடமாற்ற உத்தரவு!

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் முப்பது பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் இடமாற்ற அறிவித்தலை சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

கடந்த வாரம் ஜனாதிபதி உட்துறை அமைச்சைப் பொறுப்பேற்ற பின், இந்த அமைச்சின் கீழுள்ள பொலிஸ் பிரிவில், பல்வேறு தரத்திலுள்ள அதிகாரிகள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், இதுவரை காலமும் கொழும்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாக போலியனகே - தென்மாகாணம், மத்திய, ஊவா, மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களுக்கான பிரதிப் பொலிஸ அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். குற்றவியல் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த சிறிசேன ஹேரத் கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும், இவரது இடத்திற்கு ஜெயந்த விக்கிரமரட்ணவும் நியமிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் தலைமையக நடவடிக்கைக்கு காமினி நவரட்ணவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஐவருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, பொலிஸாரின் ஆட்சேர்ப்பு அத்தியட்சகராக ரி.சி.காரியவசமும், சேவைப் பயிற்சி அத்தியட்சகராக சி.எஸ்.ரணவீரவும், ஊழல்கள் விசாரணை அத்தியட்சகராக எச்.ஜே. எஸ். பினிதியவும், ஏ.ஆர்.வைத்தியலங்கார வெளிநாட்டு தகவல் பிரிவிற்கும், ஏ.ஜே.ரட்ணாயக்க பொலிஸ் உப சேவை அலுவலகத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதி முதல் பொலிஸ் தலைமையக நடவடிக்கைப் பொறுப்பை மஹிந்த கெட்டியாராச்சி ஏற்கிறார். குற்றத் தடுப்பு அத்தியட்சகராக எஸ்.வணிகரட்ணவும், கிராம பாதுகாப்பு கட்டளை அதிகாரியாக அல்பேட் விஜயவர்த்தனவும் நியமனம் பெறுகின்றனர்.

அத்துடன், மாநகர வீதிப்போக்குவரத்து அத்தியட்சகராக வை.ஜி.ஆர்.லாடிரும், மேல்மாகாண வடக்குப் பிரிவு அத்தியட்சகராக வி.ரி.சுந்தரலிங்கமும் மாற்றலாகின்றனர். இதேவேளை - அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மூவரும் உள்ளூர் மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். அத்துடன்; யாழ்ப்பாண பிரதேச பொலிஸ் அதிகாரியாக சாந்த வாணகம பொறுப்பேற்கவுள்ளார். (01)

## அரசுக்குப் போதிய...

படுத்தி பாதுகாப்பு, உள்துறை மற்றும் தொடர்பாடல் அமைச்சர்களை பதவி நீக்கி அந்த அமைச்சுக்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

இந்த முக்கிய மூன்று அமைச்சுக்களின் பொறுப்பும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. இதனால் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது அரசாங்கத்திற்கு கடினமாக உள்ளது.

எனவே விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டு வந்த சமாதான் நடவடிக்கைகளை ஜனாதிபதி பொறுப்பேற்று முன்னெடுத்துச் செல்வதற்கு அவரிடம் கையளிக்க தாம் தயார் என்றும், அதற்கான ஒத்துழைப்பை அரசாங்கம் வழங்கும் `எனவும், பிரதமர் தெரிவித்ததாக பீரிஸ் கூறினார்.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஜனாதிபதியிடம் வழங்கக்கூடிய சாத்தியங்கள் குறித்து ஆராயுமாறு வெளிநாட்டுத் தூதரிடம் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய அரசை அமைக்க முன்வருமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கை தொடர்பாக ஆராய்வதற்கு முன்னர் சமாதான நடவடிக்கை மற்றும் பல்வேறு விடயங்கள் பற்றியும் ஆராயவேண்டிய தேவை இருப்பதாகவும், நீதி அரசியல் யாப்பு விவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.